# மன்மதன் ஒப்பாரி

## – ஓலைச்சுவடி

*சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக (Diploma) சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பேடு*


பதிப்பு

ஸ்ரீ. பிரேம் குமார்

மேற்பார்வையாளர்

வீ.அரசு

பேராசிரியர் – தலைவர்,

தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை –600 005



மே – 2004.

# மன்மதன் ஒப்பாரி

## – ஓலைச்சுவடி

*சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக (Diploma) சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பேடு*


பதிப்பு

ஸ்ரீ. பிரேம் குமார்

மேற்பார்வையாளா

வீ.அரசு

பேராசிரியர் – தலைவர்,

தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை –600 005



மே – 2004.

வீ. அரசு
பேராசிரியர் –தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை –600 005.

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

**சுவடியியலும் பதிப்பியலும்** நிறைசான்றிதழுக்கான பதிப்பேட்டைத் திரு. ஸ்ரீ. பிரேம்குமார் அவர்கள் என் மேற்பார்வையில் ஓலைச்சுவடியிலிருந்து **மன்மதன் ஒப்பாரி** என்னும் பதிப்பேட்டை உருவாக்கியுள்ளார். இந்தப் பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்று சான்றளிக்கின்றேன்.

இடம் : சென்னை
நாள்:

வீ. அரசு
(மேற்பார்வையாளர்)

ஸ்ரீ. பிரேம்குமார்
ஆய்வு மாணவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

# பதிப்பு உறுதிமொழி

**சுவடியியலும் பதிப்பியலும்** நிறைசான்றிதழுக்கான **மன்மதன் ஒப்பாரி** என்னும் ஓலைச்சுவடிப் பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இந்தப் பதிப்பேடு இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் ஆய்வரங்கிற்கும் அளிக்கவில்லை என்று உறுதி அளிக்கின்றேன்.

இடம் : சென்னை (ஸ்ரீ. பிரேம்குமார்)
நாள்:

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | 1–2 |
| பதிப்புரை | 3–9 |
| ஆய்வுரை | 10–36 |
| மன்மதன் ஒப்பாரி | 37–92 |
| துணைநூற்பட்டியல் | 93–95 |
| பின்னிணைப்பு–1 | 1–3 |
| பின்னிணைப்பு–2 | 4–8 |

1

# நன்றியுரை

சுவடியியலும் பதிப்பியலும் நிறைசான்றிதழுக்கான பதிப்பேடு உருவாக்கத்திற்கு ஓலைச்சுவடியிலிருந்து தலைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதியளித்தும் அச்சுவடியினைப் பதிப்பிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிய நெறியாளர் பேராசிரியர் வீ.அரசு, தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

பதிப்பிப்பதற்கான பல கருத்துகள் வழங்கிய விரிவுரையாளர்கள், முனைவர் ய. மணிகண்டன், முனைவர் கோ. பழனி, முனைவர் கி.ஜெயக்குமார், முனைவர் சி. நல்லதம்பி ஆகியோருக்கும் என் நன்றி உரியது.

என் முன்னேற்றத்திற்கு தங்களை வருத்திக்கொள்ளும் என் பெற்றோருக்கும் உடன் பிறந்த சகோதர, சகோதரிகளுக்கும் என்றும் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்கும் என் நன்றி உரியது.

ஓலைச்சுவடியைப் பார்ப்பதற்கு அனுமதியளித்த அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாட்சியர் மற்றும் அலுவலர்களுக்கும் என் நன்றி. மேலும் சுவடித்தொடர்பான துணை நூல்கள் பார்ப்பதற்கு உதவிய மறைமலை அடிகள் நூலகம், சென்னைப்பல்கலைக்கழக நூலகம், உ.வே.சா. நூலகம் ஆகியவற்றுக்கும் என் நன்றி.

ஆலோசனைகள் வழங்கிய ஆய்வு நண்பர்களுக்கும் அலுவலக உதவிகள் செய்து தரும் திரு. சங்கரன் அய்யா, திரு.பாலகுமாரன் அவர்களுக்கும் என் நன்றி.

சிறந்த முறையில் கணினி செய்து வடிவமைத்துக் கொடுத்த டுடேகிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும் என் நன்றி.

– ஸ்ரீ. பிரேம் குமார்

# பதிப்புரை

நாட்டார் வடிவங்களில் எந்த ஒரு சூழலுக்கும் வாய்மொழிப் பாடல்கள் வரிந்துகட்டி நிற்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அந்த வகையில் ஒப்பாரிப் பாடல்கள் சிறப்பிடம் பெற்றனவாக நாட்டுப்புற மக்களிடம் திகழ்கின்றது. காலந்தோறும் வாய்மொழியாக வழங்கப்பட்டு வந்த நாட்டார் பாடல்கள் பின்பு சுவடிகளில் பலரால் எழுதப்பட்டு, அவை பிற்காலத்தில் கி.வா.ஜகந்நாதன் போன்றோர்களால் சுவடிகளிலிருந்து பதிப்பிக்கப்பட்டும் உள்ளது. அவ்வகைப்பாடல்களில் ஒப்பாரிப் பாடல்களும் அடங்கும். ஒப்பாரிகள் இறந்தவர்களுக்காகப் பாடப்படுவது. குடும்ப உறவுமுறை அனைத்திற்கும் ஒப்பாரிப் பாடல்கள் இருப்பதை சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. சான்றாக இன்றும் கிராமத்தில் மகன் இறந்தால் ஒரு ஒப்பாரி, அண்ணன் இறந்தால் ஒரு ஒப்பாரி என்று பலவாறு ஒப்பாரி வைக்கப்படுவதை வயதான பெண்களின் வாய்மொழி மூலம் அறியமுடிகின்றது. இவ்வாறு ஒப்பாரி வைப்பதற்கென சில கிராமங்களில் பெண்கள் இருப்பதையும் அவர்களுக்கு ஒப்பாரி வைத்தபின் ஊதியம் அளிப்பதையும் காணமுடிகின்றது. இவ்வாறாக நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்டதாக ஒப்பாரிப் பாடல்கள் திகழ்கின்றன.

காலம் நவீனத்திற்கு மாறிக் கொண்டு இருப்பதால் பழையன கழிதல் என்ற சூழல் ஏற்படுகின்றது. இதன் காரணமாக ஒரு சிலரால் நாட்டார் பாடல்கள் சுவடிகளிலிருந்து தொகுக்கப்பெற்றுள்ளன. ஒப்பாரியின் ஒரு வகையாக மன்மதன் ஒப்பாரி என்ற ஓலைச்சுவடி (T.R.2400, நூ.கு. எண்.R.5328)அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் இருந்தது. அதனைப் பதிப்பிக்கும் முயற்சியில் உற்றுநோக்கும் போது அதில் நான்கு பொருள் சார்ந்த

பாடல்கள் எனக்குக் கிடைத்தன. அவற்றுள் மன்மதன் ஒப்பாரியும் இரதிபுலம்பலும் பதிப்பிக்க எடுத்துக்கொண்டேன் . ஏனெனில் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையதால் தேர்ந்தெடுக்கப்பட்டது. நான்கு பொருள் சார்ந்த சுவடிகள் ஒரே கட்டில் இருந்தாலும் அதற்கு மன்மதன் ஒப்பாரி என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. மன்மதன் பற்றிய ஒப்பாரிப்பாடல்கள் இன்றளவிலும் நாட்டார் மக்களிடையே வழங்கப்பட்டு வருவதையும் அதற்கென விழாக்கள் எடுத்து நடத்துவதையும் காணமுடிகின்றது. மேலும் மன்மதன் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களிலும் புராணங்களிலும் காணக்கிடைக்கின்றன.

நாட்டார் வடிவங்களில் மன்மதன் ஒப்பாரி என்பது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு நிலையில் அவர்களின் பேச்சு வழக்கு நடை கலந்து பாடப்பட்டு வருகின்றது. ஆனால் கதைக்கரு மாறுபடவில்லை. மேலும், மன்மதன் ஒப்பாரி குறித்து சண்முகானந்தா புக் டிப்போ, இரத்தினநாயக்கன் அண்டு சன்ஸ் போன்ற நிறுவனங்கள் மன்மதன் ஒப்பாரி சார்ந்து பல்வேறு கூத்து நூல்களை வெளியிட்டு வருகின்றன. அந்த வகையில் சிறந்த தொரு நிகழ்த்துகலை பாரம்பரியத்தை இந்த மன்மதன் ஒப்பாரி பெற்றுள்ளது. உலக அளவில் மன்மதன் குறித்த நம்பிக்கைகளைப் பல்வேறு சான்றுகள் மூலம் அறியமுடிகின்றது. அதேபோன்று இன்றளவில் அரவாணிகளால் நிகழ்த்தப்படும் கூவாகம் திருவிழா மன்மதன் சார்ந்ததே என்று கருதும்படி உள்ளது. ஏனெனில் மன்மதனின் படைஞர் பெண்கள் என்பதாலும் அரவாணிகள் அன்பை வேண்டி நிற்பதாலும் அவனுக்காக தாலி அறுப்பதாக அங்கு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறாக பல்வேறு குறிப்புகள் மன்மதன் சார்ந்து கிடைக்கின்றன.

ஆய்வாளருக்குக் கிடைத்துள்ள மன்மதன் ஒப்பாரி ஓலைச்சுவடியில் யாரால் எப்பொழுது எழுதப்பட்டது என்ற எந்த விதக் குறிப்பும் காணப்படவில்லை. நான்கு பொருள் சார்ந்த சுவடிப் பாடல்கள் முடிந்தவுடன் பத்திற்கு மேல் வெற்றோலைகள் காணப்படுகின்றன. நான்கிலும் யார் எழுதியது என்ற எந்தவிதக் குறிப்பும் காணப்படவில்லை. மேலும், இவ்வாறு பல சுவடிகள் ஒரே கட்டில் இருப்பதால் இதனுடைய தொடர்ச்சி வேறு சுவடிகளில் இருக்குமா என்று பார்ப்பதற்கு நிர்வாகம் அமைத்து வைத்துள்ள கேட்டலாக் முறை சரியான தகவலை அளிக்கவில்லை. ஆதலால், அங்குள்ள ஒவ்வொரு சுவடிகளையும் பார்த்தால்தான் இதன் தொடர்ச்சிகளை அறியமுடியும். அல்லது இத்துடன் முடிந்துவிட்டதா? என்றும் அறியமுடியும். ஏனெனில், முடிவு என்பதற்கு எந்தவித அறிகுறிகளும் தென்படவில்லை. மன்மதன் ஒப்பாரி முடிந்தவுடன் (முடிந்ததா தெரியவில்லை) அடுத்து இரதிபுலம்பல் இடம் பெறுகின்றது. அடுத்து ஆயிரவர்கள் பேரில் பொன்னூஞ்சல் என்று பத்துப்பாடல்களும் அதற்கடுத்து கதிர்காமமாலை வாய்மொழி வடிவத்தில் கிடைக்கின்றன. அதன்பிறகு வெற்றோலைகள் இருக்கின்றன. இதுபோன்ற பெயரில் வேறு சுவடி உள்ளதா என்று நோக்கும்பொழுது அப்பெயரில் எந்தச் சுவடிகளும் காணப்படவில்லை. தாள் சுவடிகளில் மேற்கண்ட பெயர்களில் எதுவும் இல்லை. ஆனால், மன்மதன் சார்ந்த வேறு சுவடிகள் உள்ளன. அவை மன்மதன் சரித்திரம், மன்மதன் நாடகம், மன்மதன் அலங்கார நூல், என்று பல்வேறு சுவடிகள் இருக்கின்றன. அவற்றுள் ஒருசில ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள் காப்பாட்சியர் மூலம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அவை தெளிவான நிலையிலும் முழுமையாகவும் இருக்கின்றது. ஒரு சில மன்மதன் சார்ந்த சுவடிகள் மிகவும் சிதைந்த நிலையில் படிக்க முடியாத அளவில் செல்லரித்துக் காணப்படுகின்றன. ஆனால் முழுமையாக உள்ளது. ஒருசில சுவடிகள் கேட்டலாக்கில் மட்டும்

குறிப்பிடப்பட்டுள்ளது. சுவடிகள் இல்லை. இதேபோன்ற நிலை தாள் சுவடிகளிலும் காணப்படுகின்றன. மேலும், மன்மதன் ஒப்பாரி என்ற சுவடி வேறு எந்த நூலகத்திலும் இருக்கின்றனவா என்று நோக்கும் பொழுது அப்பட்டியல்களில் மன்மதன் சார்ந்த பிற சுவடிகள் பற்றிய குறிப்புகள்தான் கிடைக்கின்றன. மன்மதன் ஒப்பாரி என்ற நிலையில் கிடைக்கவில்லை (உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், உ.வே.சா., கேரளப் பல்கலைக்கழகம், தஞ்சை சரசுவதிமகால் போன்ற நூலக சுவடி அட்டவணைகள் பார்க்கப்பட்டன).

சுவடி அமைப்பு

சுவடியின் நிலை நீண்ட ஓலையில் எழுதப்பட்டுள்ளது. மேலே கட்டும் கட்டையில் இரு துளைகள் இடப்பட்டுள்ளன. ஆனால் அந்த நீண்ட ஓலையில் ஒரு துளையில் மட்டும் நூல் இடப்பட்டு கட்டப்பட்டுள்ளது. எனவே, இச்சுவடி திரிந்து போயிருக்கலாம் என்ற ஐயம் வருகின்றது. மேலும், தொகுத்தவர்கள் சிதறிக்கிடப்பனவற்றை ஒன்று சேர்த்திக் கட்டியிருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகின்றது. ஏடுகளில் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. முதல் ஏட்டினை இருபகுதிகளாக்கி துளைக்கு இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் எழுதப்பட்டுள்ளது. கடைசியில் வெற்றோலைகள் விடப்பட்டுள்ளன. நான்கு சுவடிகள் இக்கட்டில் உள்ளன. அவை,

மன்மதன் ஒப்பாரி

இரதி புலம்பல்

ஆயிரவர்கள் பேரில் பொன்னூஞ்சல்

கதிர்காமமாலை

ஆகியவை ஆகும்.

**சுவடியின் மொழிநடை:**

சுவடியின் மொழிநடை என்று பார்க்கும் பொழுது பெரும்பான்மை நான்கு சுவடிகளும் பேச்சுவழக்கிலே அமைந்துள்ளன. இவ்வழக்குகள் கன்னியாகுமரி, நாகர்கோவில், இலங்கை (ஒன்விளிகள் விழிகள்) ஆகிய பேச்சுவழக்குகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆய்வாளர் இலங்கையைச் சார்ந்தாக இருக்கலாம் என்று கூறுவதற்கு காரணம் , கதிர்காம மாலை அச்சுவடியில் ஒரு பகுதியாக இருக்கின்றது.

பேச்சு வழக்கு சொற்களில் ஒன்னழகு, ஒன்வதனம், ஆமெண்டு, விளிகள், மொளிகள் போன்ற சொற்கள் ஓலைச்சுவடி முழுதும் காணப்படுகின்றது. ஒப்பாரி தெருக்கூத்து நிகழ்த்தும் வடிவத்தில் பாடப்பட்டிருக்கிறது. ஆனால், முதலில் கடவுள் துதி, இன்னபிற செய்திகள் இடம்பெறவில்லை. ரதி தற்க்கம், ரதி புலம்பல், ஒப்பாரி போன்ற தலைப்புகள் இட்டு பாடப்பட்டுள்ளன. ஒப்பாரி வடிவம் சிறப்பாக அமைந்துள்ளது. சில இடங்களில் வரிகள் புரியாத நிலை ஏற்பட்டது. அவற்றை அப்படியே இடம்பெறச் செய்துள்ளேன்.

**சுவடியின் எழுத்துநடை:**

சுவடியின் எழுத்து நடையைப் பார்க்கும்பொழுது பெரும்பான்மை கூட்டெழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் ணை, தோ, தொ, தீ என்று வரும் பல்வேறு எழுத்துக்களுக்கு கூட்டெழுத்துக்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. வழக்கம்போல் சுவடிகளில் நிகழும் றகர, ரகர வேறுபாடு, லகர, ளகர, ழகர, வேறுபாடு ன, ண, ந போன்ற பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. எழுத்துகளில் புள்ளிகள் காணப்படவில்லை.

ஒரு சிலவற்றில் புள்ளியிடப்பட்டு எழுதப்பெற்றுள்ளன. சிவமயம் என்று தொடங்கப்பட்டுள்ளது சுவடி. தாளின் இடப்பக்கத்தில் தலைப்புகள் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடல் முடிந்தவுடன் எண்கள் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்த வரி வரவேண்டும் என்பதற்குத்தானா அந்த இடைவெளி (–) இடப்பட்டுள்ளது என்பது சந்தேகமாக உள்ளது. ஏனெனில் ஒரு சில இடங்களில் தொடர்பே இல்லாமல் அடிக்கடி இடைவெளி (–) இடப்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் நீண்ட வரிகள் சென்றவுடன் இடைவெளி (–) இடப்பட்டுள்ளது. மேலும், சுவடியில் இடம்பெறும் பாடல்களுக்கு ஒரு சில இடங்களில் தொடர்ச்சியாக பாடல் முடிவு எண்கள் இடப்பட்டுள்ளது. ஒரு சில பாடல்களுக்கு முடிவு தெரியவில்லை. எண்களும் இடப்படாமல் அடுத்த பாடல்களுக்கு எண்கள் இடப்பட்டுள்ளன. இவ்வாறாக பல்வேறு நிலையில் இச்சுவடியின் எழுத்து முறைமைக் காணப்படுகின்றது. மேலும், வடமொழிச் சொற்களும் காணப்படுகின்றன. ஆயிரவர்கள் பேரில் பொன்னூஞ்சல் என்ற சுவடிப் பாடல் விருத்தப்பாடல்களாக உள்ளது. மற்றபடி வேறு எந்த இடங்களிலும் யாப்புகள் பயன்படுத்தப்படவில்லை. இச்சுவடியில் பாடல் முற்றுக் குறிகளாக 'உ' என்ற குறி பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய குறிகள் நீக்கப்பட்டு பாடல் முடிந்தவுடன் முற்றுப்புள்ளிகள் இடப்பெற்றுள்ளன. சுவடியில் உள்ள எழுத்துப் பிழைகளும் நீக்கப்பட்டுள்ளன. மேலும் 'மன்மதன் ஒப்பாரி' போன்று வேறு சுவடிகள் கிடைக்காததனால் பதிப்பொப்பு நோக்கப்படவில்லை. இருப்பினும் சண்முகானந்தா புக் டிப்போ, இரத்தின நாயக்கன் சன்ஸ் வெளியிட்டுள்ள மன்மதன் சார்ந்த ஒப்பாரிப் பாடல்களுடன் ஒப்பு நோக்கப்பட்டது. அவற்றுள் இரண்டிலும் கதைக்கரு ஒன்றாக உள்ளது. பாடல் வடிவங்கள், சொற்கள் பெரும்பான்மை மாறுபட்டுள்ளது. இதே போன்று மதுராந்தக வட்ட காமன் பாடல்களும் ஒப்பு நோக்கப்பட்டது. அப்பாடல்களுக்கும் சுவடியில் உள்ள

பாடல்களுக்கும் ஒன்றும் தொடர்பில்லை. கதைக்கரு அமைப்பில் ஒன்றாக உள்ளது. ஒரு சில வார்த்தைகள், அடிகள் ஒற்றுமையுடையனவாக உள்ளன. சான்றாக தாதிகளா, இளவாழைத் தண்டுகளா, என்சோட்டுப் பெண்டுகளா போன்றனவற்றைக் கூறலாம். இவ்வாறாக நாட்டார் வடிவங்களில் ஒப்பாரிப் பாடல்களின் இடத்தை அறிவதற்கு இந்த ஓலைச்சுவடியில் இருந்து பதிப்பிக்கப்படும் 'மன்மதன் ஒப்பாரியும்' மன்மதன் குறித்த ஆய்விற்குத் துணைபுரியும்.

# 10
# ஆய்வுரை

மக்கள் வழிபடும் தெய்வங்களில் ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு தனிச்சிறப்புகள் வாய்ந்தனவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கல்வி என்றால் சரசுவதி, செல்வம் என்றால் இலட்சுமி, வீரம் என்றால் பார்வதி என்ற வகையில் பல்வேறு தெய்வங்கள் பல்வேறு கூறுகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வழிபடப்படுகின்றன. அவ்வகையில் தெய்வங்களில் அழகு தெய்வமாக முதன் முதலில் முருகனை வழிபடுவதை நாம் காண்கிறோம். அதற்கு அடுத்த நிலையில் அல்லது இணையான நிலையில் அழகு என்ற நிலைக்கு மன்மதனையே அனைவரும் கூறுவர். இலக்கிய வரலாற்றிலும் சரி வாய்மொழி வாழ்வியல் சார்ந்த சடங்குகளிலும் சரி மன்மதன் சிறப்பிடம் பெறுகிறார்.

மன்மதன் பற்றிய வரலாற்றை நோக்கும் போது பல சிறப்புப் பொருந்திய செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன. தொடக்க கால இலக்கியங்கள் முதல் இன்று நம்மிடையே நிகழ்த்தப்பெறும் நவீன நாடகப் பிரதிகள் வரையும் மன்மதன் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. மேலும், மேலை நாடுகளில் பல்வேறு வகையான பெயர்களில் விழாக்களும் சிறப்புகளும் மன்மதனுக்கு செய்யப்படுகின்றன. இவ்வாறாக சிறந்ததொரு பாரம்பரியத்தை மன்மதன் வரலாற்றில் பெற்றுள்ளார்.

**மன்மதன் அறிமுகம்:**

மன்மதன் திருமாலின் உள்ளத்தில் பிறந்தவனாவான். மனத்திற்குக் கிளர்ச்சியைக் கொடுப்பதால் மன்மதன் என்று பெயர்

பெற்றான். இம்மன்மதன் கதை இலக்கியங்களிலும் புராணங்களிலும், தெருக்கூத்து வடிவங்களிலும் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அவற்றுள் இம்மன்மதன் சிவபெருமானால் எரிக்கப்பட்ட கதையைச் சிவமகாபுராணம் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளது.

"தாராகாசுரன் நான்முகனிடம் பெற்ற பெருவரங்களால் அசுரர்க்கு அரசனாகித் தேவர்களைப் பெரிதும் கொடுமைப்படுத்தினான். துன்பந்தீர்க்கத் தேவர்கள் நான்முகன், இந்திரன் ஆகியோரை நாடினர். தேவர்களின் வற்புறுத்தலுக்கும் வேண்டுதலுக்கும் இணங்கி மன்மதன் யோக மூர்த்தியாய்த் தவத்திலிருக்கும் சிவபெருமான் மீது காமக்கணைகளைத் தொடுத்தான். மலரம்புகள் பட்ட அவ்வளவில் இறைவன் தவம் கலைந்தது. இறைவன் சினங்கொண்டு நெற்றிக்கண்ணைத் திறந்தார். அக்கண்ணில் இருந்து புறப்பட்ட தீயில் காமன் எரிந்து சாம்பலானான். காமனின் மனைவி இரதி கதறியழுது சிவபெருமானை அணுகிக் கணவனை மீட்டுத்தர வேண்டினாள். சிவபெருமான் 'இவன் உனக்கு மட்டும் உருவத்துடனும், மற்ற தேவாதி தேவர்களுக்கு அருவமாகவும் இருப்பான் என வரம் தந்தார்." அருவமான நிலையில் அங்கமற்றவன் என்பதால் அனங்கன் என்றும் மன்மதனுக்கு ஒரு பெயர் ஏற்பட்டது. காமவேளை எரித்த இறைவனின் இந்தத் திருக்கோலத்திற்குக் காமதகன மூர்த்தி என்பது பெயர்.

தன் கணவனை மீண்டும் பார்க்க விரும்பிய இரதிக்கு, மன்மதனின் அடுத்த பிறப்புப் பற்றிச் சிவபெருமான் கூறியதையும் சிவமகாபுராணம் கீழ்க்காணுமாறு விரித்துரைக்கிறது.

"துவாரகையில் கிருட்டிணனுக்கும் உருக்கு மணிக்கும் மன்மதன் பிரத்யும்னன் என்ற பெயரில் மகனாய்ப் பிறப்பான். இவனைச் சம்பராசுரன் என்னும் அரக்கன் தூக்கிச் சென்று கடலுக்குப்பாலுள்ள தன் தலைநகரில் வைப்பான். அதுநாள் வரை இரதி சம்பராசுரன் நாடு சென்று அங்கிருக்கட்டும் அதே நகரில் மன்மதனை அவள் அடைவாள். சம்பராசனை மன்மதன் போரில் வென்று பொன்னும் பொருளும் கொண்டு இரதியுடன் துவாரகையடைந்து சிறப்பாக வாழ்வான்" என்று மன்மதனின் அடுத்த விறப்பு பற்றிய குறிப்பும் சிவமகாபுராணம் கூறுகிறது.

**மன்மதன் பிறப்பு பற்றிய செய்திகள்:-**

மன்மதன் பிறப்புப் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் திருமாலின் மணத்தில் உதித்தவன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் மனைவி இரதிப் பற்றியும், அவன் தம்பி சாமன் பற்றியும் அவன் சார்ந்த கோயில், பண்டிகைப் போன்ற குறிப்புகளே காணக்கிடைக்கின்றன. இடைப்பட்ட நிகழ்வுகள் இலக்கியங்கள் வாயிலாக அறியமுடியவில்லை.

மன்மதன் குறித்த முற்பிறப்பு கதை ஒன்று இருப்பதை வாழ்வியல் களஞ்சியம் மூலம் அறிய முடிகின்றது. அக்கதை பின்வருமாறு.

அசித்தன் என்பவன் பப்பா நாட்டுச் சபநன் குமரனாவன். இவன் தீயொழுக்கமுள்ளவனாய் ஒரு பார்ப்பிணியைக் களவில்

புணருகையில் பூஜாகாலம் வர அவள் முலையைச் சிவலிங்கமாகப் பூசித்து மறுபிறப்பில் மன்மதனாகப் பிறந்தான் என்று தெரிவிக்கின்றது. (கலைக்களஞ்சியம், பக்கம்–23)

ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக்கு உருக்குமணி தேவியிடம் உதித்த குமரன். இவன் பிறந்த பத்தா நாள் சாம்பாசுரன் இவனைத் தூக்கிக் கடலில் இட, மீன் ஒன்று இவனை விழுங்கிற்று, அம்மீனை ஒரு வலைஞன் பிடித்தான். அதன் வயிற்றில் இருந்த குமரனை மாயாவதி வளர்த்தனள். இவனே வளர்ந்து சாம்பாசுரனைக் கொன்று மாயாவதியுடன் துவாரகைச் சென்று தன்னை வளர்த்த மாயாவதியை மனங்கொண்டனன். இவன் முற்பிறப்பில் மன்மதன்; மாயாவதி இரதிதேவி. சாம்பாவனைக் கொன்ற காரணத்தால் மன்மதனுக்குச் சம்பராரி என ஒரு பெயர் வந்தது. இவன் மீன்வயிற்றில் உதித்ததால் மீனக்கொடியாயிற்று. இவன் குமரன் அநிருத்தன்" என்று அபிதான சிந்தாமணியில் அடுத்த பிறப்பு குறித்த கதைப்பற்றி (பக்–1122) விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மன்மதனின் தந்தையாக விஷ்ணு மட்டுமல்லாமல் தருமன், பிரம்மாவையும் குறிப்பிட்டுள்ளது. அபிதான சிந்தாமணி (பக்–409) இவ்வாறாக மன்மதனின் முற்பிறப்பு, அடுத்தபிறப்பு எனப் பல்வேறு செய்திகளைப் பல்வேறு புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

**இலக்கியங்களில் மன்மதன் பற்றிய குறிப்புகள்:–**

சங்க காலம் தொடங்கி இன்றுள்ள நவீன இலக்கியங்கள் வரை மன்மதன் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. சங்க

காலங்களில் காமன் என்ற பெயரிலேயே குறிப்பிடபட்டுள்ளது. மன்மதன் என்ற சொல்லாட்சி பக்தி இலக்கிய கால கட்டங்களிலேயே தொடங்கி இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் தொல்காப்பியம் காமம் என்றும் சங்க இலக்கியங்கள் காமன் என்ற சொல்லாட்சியையே கையாண்டுள்ளன.

காமன் என்ற சொல் காமம் என்ற சொல்லிலிருந்து வந்தது. காமம் என்பதற்கு இச்சை, சிற்றின்பம், ஆசை, விருப்பம் என்று தமிழகராதி விளக்கமளிக்கின்றது. இச்சொல் இலக்கிய வழக்கில் மன்மதனையும், உலக வழக்கில் சிற்றின்பத்தையும் குறிப்பதாகவே அமைகிறது. (Tamil lexicon, Vol-II, 1929:871)

சங்க இலக்கியங்களில் மன்மதன் பற்றிய குறிப்பு கலித்தொகை, பரிபாடல், பட்டினப்பாலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. அதுவும் காமன் என்ற பெயராலும் காமன் சார்ந்த சடங்குகளாலும் காட்டப்படுகின்றன.

"படையிடுவான் மன்கண்டீர் காமன் மடையடும்

பாலொடு கோட்டம் புகின் (கலித்தொகை 109:19:20)

என்றும்

"பண்டாரம் காமன் படைஉவள்கண் காண்மின்" (பரிபாடல்: 11:123)

என்றும்

"பருவரலும் ..... காமன் ....... வான் (குறள் – 1197)

என்று காமன் என்ற பெயரிலும்

"காமர் நடக்கும் நடைகாண்" (கலித்தொகை – 94:33)

என்று காமர் என்ற பெயரிலும்

"மாரன் ஒப்பார் மார்பணி கலவி" (பரிபாடல் – 8:119)

என்று மாரன் என்ற பெயரிலும்

"இரதிகாமன் இவள் இவன் எனாஅ

விரகியர் வினவ வினாகிறுப் போரும்" (பரிபாடல்– 19:48–49)

என்று இரதிகாமன் பற்றிய சேர்ந்த குறிப்பும்

"நெடியோன் மகன் நயந்து தந்தாங்கு அனைய

வடிய வடிந்த வனப்பின்என் நெஞ்சம்" (கலித்தொகை:14:8–9)

என்ற அடி நெடியோன் மகன் என்று மன்மதனைக் குறிப்பிடுவதையும் காணமுடிகின்றது.

இவ்வாறாக சங்க இலக்கியத்தில் மன்மதன் பற்றிய செய்திகள் கலித்தொகையிலும், பரிபாடலிலும் மிகுதியாக வருகின்றன. திருக்குறளிலும் பட்டினப்பாலையிலும் குறைவாக வருகின்றன. தொல்காப்பியத்தில் காமம் என்ற சொல்லாட்சியே காணப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் காமதேவனைப் பற்றிய சில செய்திகள் காணக்கிடக்கின்றன. வாணாசுரன் தன் மகள் உழைகாரணமாகக் காமனின் மகன் அநிருத்தனைத் தன் தலைநகரான சோவில் கொண்டு போய்ச் சிறை வைக்க, அவனை மீட்கும் பொருட்டு, அத்தலைநகர் வந்த மாயோன் அந்நகர வீதிகளில் குடக்கூத்து நிகழ்த்தினாராம். அதே நகரில் காமன் தன் மகனைச் சிறைமீட்டு ஆண்தன்மை திரிந்த பெண்மைக் கோலத்தோடு 'பேடி'யாக இருந்து பேடு என்னும் கூத்தை நிகழ்த்தியதையும் சிலம்பு குறிக்கிறது.

மேலும் மன்மதன் கணைகள் பற்றியும் குறிப்பிடுகின்றன. மன்மதன் பூவில், கரும்புவில், இரும்புவில் கொண்டவன் என்பதை மதனவித்தாரமாலை தெரிவிக்கின்றது. தேவர்கள் மேல் எய்துவது பூவில் ஆகும். மனிதர் மேல் எய்துவது கரும்பு வில்லாகும். அசுரர்கள் மேல் எய்துவது இரும்பு வில்லாகும்.

மன்மதனின் கரும்புவில் பற்றிச் சிலம்பும், மணிமேகலையும் சான்று பகர்கின்றன.

"உருவிலாளனொரு பெருங்கரும்புவில்" (சிலம்பு;44)

"கரும்பு நாண் கருப்புவில் லிருப்புக் கணை

கருப்புவில்லி யருப்புக் கணை" (மணிமேகலை,85)

மேலும், காமன் கோயில், மன்மதன் விழா பற்றிய குறிப்புகளும் சிலப்பதிகாரம், பெருங்கதை போன்றவற்றின் மூலம் அறியமுடிகின்றன.

இவ்வாறாக சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை இன்னபிற காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் தற்கால இலக்கியங்களிலும் வாய்மொழிப் பாடல்களிலும் கலைப்பிரதிகளிலும் மன்மதன் பற்றிய குறிப்புகள் அதிக அளவில் காணக்கிடைக்கின்றன.

**மன்மதனின் பல்வேறு பெயர்கள்:-**

சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றுவரை மன்மதனுக்கு பல்வேறு பெயர்கள் வைத்து கூறப்பட்டுள்ளன. இப்பெயர்கள் யாவையும் அவன் அழகையும் தொழிலையும் விளக்கும் வகையில் கூறப்பட்டுள்ளன.

மதன் (மிகு காமத்தில் அமிழச் செய்பவன்), மன்மதன் (உள்ளத்தைச் சலனப் படுத்துபவன்), ஸ்மரன் (ஆன்மாவின் காம இச்சையிலிருந்து தோன்றுபவன்), கார்ஸ்னி (கிருஷ்ணன் மகன்), தர்பகன் அல்லது தீபகன் (பூங்கொத்துடன் காட்சி தரும் நல்லிளமையான்), பிரத்தியும்னன் (யாவரையும் வெற்றி கொள்வோன்), குசுமேசு (மலர்க்கணை கொண்டவன்), காமன் (காமவடிவினன்), காலக்கேளி (மகிழ்ச்சி வடிவினன்), மாயன் (மயக்குபவன்), மதுதீபன் (தேனொழுகு வில் விளங்கினன்), மூர்மூரன் (அனையாக் காதல் வடிவினன்), இராகவிரந்தன் (காமத்தினொடு ஒளிந்து வேட்டையாடுபவன்), ரூபஸ்திரன் (அழகின் ஆயுதமானவன்), சாமந்தகன் (மனதை அலைக்கழிப்பவன்), சாம்சார குரு (உலக ஆசிரியன்), வாமன் (அழகன்), இரதமாரீசன் (சிற்றின்பத் தோய்வாளன்), என்று

இலக்கியங்கள் பல பெயரிட்டு அழைக்கின்றன. (ராஜகோபாலன், 1985;115)

பிங்கல நிகண்டு, மான்மகன், மதனன், மகரக்கொடியோன், வேனிலாளி, வேள்வசுந்தன், அங்கசன், அநங்கன், ஐங்கணைக்கிழவன், திங்கட்குடையோன், தென்றல் தேரோன், வனவசன், வில்லிமோகன், மலர்க்கணையோன், மதிசகன், மனோபு, மன்மதன், திருமகன் மைந்தன், சம்பரசூதனன், உருவிலி, கடன்முரசோன், கைதைச்சரிகையோன், கந்தர்பன், சித்தகன், பூவாளி, பூமன், கரும்புவில்லி என்று முப்பத்திரண்டு பெயர்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றது.

இப்பெயர்களில் சித்தன், மனோசன், மனோபவன், மனோபு முதலியவற்றிற்கு மனதில் பிறந்தவன் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. மாரன், காம இச்சை உடையார்க்கு மரண தேவனைத் தருபவன் என்றும் வேள், விருப்பத்திற்குரியவன் என்றும் அநங்கன், உருவிலி என்றும் அங்கசன், உடலில் தோன்றுபவன் என்றும் பொருள்படும்.

கயாதரம், சேந்தன் திவாகரம், சூடாமணி, நைடதம், முதலிய நூல்கள் காமனுக்குள்ள மற்ற பெயர்களைத் தெரிவிக்கின்றன. இவற்றில் மதன், மன்மதன், மாரன், காமவேள், காமக்கடவுள், காமதேவன், காமன் முதலிய பெயர்களே அனைவராலும் அறியப்பெறும் காமன் பெயர்களாகும்.

இவை தவிர்த்துப் புராணங்களில் பிரத்தியும்னன், அசித்தன், நிசும்பன், அனங்கன் போன்ற பெயர்கள் பல்வேறு புராணங்களில் எடுத்துக் கூறியுள்ளதை அறியமுடிகின்றது.

**மன்மதனின் படைகள்:**

இலக்கியங்களில், புராணங்களில் மன்மதன் அரசனாகக் கூறப்படுவதால் அவனுடைய படைகள் பற்றிய குறிப்புகளும் பாடல்களில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. "மன்மதனின் போருக்குரிய படைஞர் – மங்கையர்; தேர்–தென்றல்; கொடி–மீன்; குதிரை–கிளி; யானை–இருள்; காளாஞ்சி–மல்லிகை மலர்; வாள்–தாழைமடல்; வில்–கரும்பு; நாண்–சுரும்பு (வண்டு); அம்புகள்–தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என ஐந்து மலர்கள்; பாசறை – மலர்ப்பொழில், ஐங்கணைகளில் தாமரை காம நினைவையும், மா பசலையையும், அசோகு உணவை வெறுத்தலையும், முல்லை படுக்கையிற் கிடத்தலையும், நீலம் மரணத்தையும் உண்டாக்கும்" என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. (தொகுதி–3, பக்–512–513)

T-7057

மேற்கண்டவை தவிர்த்து வாழ்வியற் களஞ்சியம் மேலும், சிலவற்றை இவனுடைய படைகளாக குறிப்பிடுகின்றன. அவை, "கடலின் ஓங்காரம் இவன் முரசொலி; எக்காளம் குயிலின் குரல்; இவன் வெண்கொற்றக்குடை நிலா, வசந்த காலம், நிலா, மணிமேடை, மணற்குன்று, பூஞ்சோலை, மலர்நறுமணம், அழகு முதலியன இவன் பரிவாரங்கள் என்று குறிப்பிடுகின்றது. (வாழ்வியற் களஞ்சியம், பக்–144–145, தொகுதி–7)

மன்மதன் கணைகள் பற்றி அபிதான சிந்தாமணி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

“வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம், இவை முறையே உன்மத்தம், மதனம், சம்போகம், சந்தாபம், வசீகரணம், எனவும் பெயர் பெறும். இவற்றின் அவத்தைகளாவன: சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம்; (உனமாதம், ரோதனம், சம்மோஹணம், சோஷணம், மாரணம்) ஆகியவைகளாகும். அவற்றுள் சுப்பிரயோகம் சொல்லும் நினைவும் விப்பிரயோகம் வெய்துயிர்த்திரங்கலும் சோகம் வெதுப்பும் துய்ப்பன தெவிட்டலும், மோகம் அழுங்கலும் மொழிபல பிதற்றலும், மரணம் அயர்ப்பும் மரணமும் தருவன, என்று மன்மதன் கணைகள் பற்றி விளக்கம் அளிக்கின்றது. (அபிதான சிந்தாமணி பக்–1280)

மன்மதனின் மலர்க்கணை ஐந்து இவை பெண்களின் ஒவ்வோர் உறுப்புகளைக் களமாகக் கொண்டது. மன்மதனின் அம்புகளில் அரவிந்தம் பெண்களின் மார்பிலும் மாம்பூ கொங்கையிலும் அசோகம் துஞ்சும் கண்ணிலும் முல்லை தலையிலும் நீலம் அல்குலிலும் எய்யப்பெறும். இவற்றில் அரவிந்தம் நீங்காத நினைவையும் மாம்பூ பசலையும் அசோகம் உணவை நீக்குதலையும் முல்லைப்பூ சோகத்தையும் நீலம் மரணத்தையும் தரவல்லன எனக் குறிப்பிடப்படுகிறது. (மதன வித்தாரமாலை, பக்–105)

**வேதம் , புராணங்களில் மன்மதன்:–**

வேத நூல்களில் மன்மதன் நீரில் தோன்றியவனாகக் கூறப்படுகின்றான். வேதங்களில் மன்மதன் காதல் உணர்வுகளின் வடிவமாகக் காட்டாது. நல்லவனாகக் காட்டப்பெறுகிறான். ரிக்

வேதத்தில் உயிரின் பெருக்கத்திற்கு அடிப்படையானவனாகக் கூறப்பட்டுள்ளது. மன்மதன் அழிவிற்கு வேதங்களில் இரண்டு விதமான காரணங்கள் கூறப்படுகின்றன.

– பிரமன் படைத்த முதல் பெண்ணோடு காதல் கொள்ளச் செய்து அதனால் சிவனின் கோபத்திற்கு மன்மதன் காரணமானான். சிவன் கண்ணால் எரியக்கடவது என்று மன்மதனுக்கு பிரமன் சாபமிட்டான்.

– பிரமன் பெண்மான் உருவிலிருந்த கலைமகளோடு ஆண்மான் உருவில் புணரச் செல்லுகையில் தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அப்போது சிவன் அம்பை எய்தி ஆண்மானைக் கொன்றார். அந்த உடலில் இருந்த உயிர் ஆதிரை நாளன்று வானுலகை அடைந்தது. கலைமகளும் தேவர்களும் சிவனிடம் முறையிட்டனர். சிவன் மனம் இரங்கி பிரம்மனை உயிர்ப்பித்துத் தந்தார். இந்தச் செயலுக்கு அடிப்படைக் காரணம் மன்மதனே என்று சிவன் சினம் கொண்டு எரித்தார்.

இம்மாதிரியான காரணங்களைக் காட்டி வேதங்கள் மன்மதன் எரிந்ததற்குக் காரணம் பிரம்மனே என்பதை நிறுவுகின்றன.

ஆனால், புராணங்களில் மன்மதன் காமத்தை உண்டாக்கும் கடவுளாகவே படைக்கப்பட்டிருக் கின்றான். மன்மதன் பற்றிய முற்பிறப்பு, மறுபிறப்பு, கிளைக்கதைகள், மனைவி இரதி, தம்பி சாமன், அவதாரங்கள், எரிந்ததற்கான காரணங்கள் எனப் பல தகவல்களை

உணர்த்துவனவாக புராணங்கள் இருக்கின்றன. அவற்றுள் வாமன புராணம், கந்தபுராணம், சிவமகாபுராணம், பூவாளூர்ப் புராணம் எனப் பல புராணங்களில் மன்மதன் பற்றிய கதைகள் அதிக அளவில் இருக்கின்றன. இப்புராணங்களும் மன்மதன் அழிவிற்கு பிரம்மனே காரணம் என்பதை நிறுவுகின்றன. சில புராணங்கள் குமரக்கடவுளின் வடிவமாகவும் கருதுகின்றன. வைணவக் கதைகள் கிருஷ்ணனின் அவதாரமாகவும் கருதுகின்றன.

இவன் எரித்தற்கான காரணத்தைப் பூவாளூர்ப் புராணம் ஊழ்வினைப் பயன் என்கிறது. இவன் மன்மதனாகப் பிறக்குமுன் பிறப்பில் ஒரு அரசன். தன் மனைவியுடன் வேட்டைக்குச் சென்று ஆண்டு ஒரு இருடி வளர்த்த மானைக் கொன்று அவரால் சாம்பராகச் சாபம் பெற்றவன் என்று குறிப்பிடுகின்றது. இப்புராணத்தின் மூலம் அவ்வரசன் மன்மதனாகப் பிறந்து சிவனால் எரிந்து சாம்பலாவதை அறியமுடிகின்றது. இவ்வாறாக மன்மதன் பிறப்பும் வாழ்வும் பலவாறு புராணங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளது. எனினும் பொதுவாக மன்மதன் திருமாலின் மகன், காம உணர்விற்கு அடிப்படையானவன், குமரக் கடவுளின் தோற்றம், சிவன் மீது மலர் அம்பு எய்தியவன், சிவனின் விழியில் எரிந்தவன் என்று மன்மதன் பற்றிப் புராணங்களில் விளக்கப்படுகின்றது.

**மன்மதன் விழா:-**

இவ்விழா நம் பண்டைய இலக்கியங்களில் காமன் பண்டிகை என்று பெயரிட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதும் இவ்விழா

பெரும்பான்மையான ஊர்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. மன்மதன் விழா குறித்து அபிதான சிந்தாமணி குறிப்பிடுகையில்,

“இதனுடைய காலவரையறை ஏழுதினம், பெரிய நகரங்களில் நடைபெறுவதுண்டு. உத்தமனான தலைமகனை மணஞ்செய்து கொள்ள எண்ணிய கன்னியர்கள் இவ்விழா நாட்களில் தத்தமக்கியன்ற தானங்களையும், தருமங்களையும் செய்வார்கள். மன்மதனுடைய ஆலயத்தில் சென்று அவர்கள் வழிபடுவதுண்டு. இராசகிரிய நகரத்தில் இவ்விழா நடந்தபொழுது வழிபாடு செய்தற்குக் காமன் தோட்டத்தையடைந்த பதுமாபதி அங்கே உதயணனைக் கண்டு விருப்புறுவாளாயினள் (பெருங்கதை) என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (ப–1280)

மேலும், வாய்மொழி மரபில் கிராமப் புறங்களில் இவ்விழா எவ்வாறு நடைபெறுகின்றது என்று வாழ்வியற் களஞ்சியம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றது.

“இந்து சமயத்தவருள் ஒரு பகுதியினரால் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். இவ்விழா இந்தியாவின் பல பகுதிகளிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. காமன், மன்மதன், காமவேள், மாரன், அனங்கன் எனப் பலப் பெயர்களில் கூறப்படுகிறான். உயிர்களுக்குக் காமத்தைத் தோற்றுவித்து, உற்பத்திச் செயல் நிகழ்த்துவதற்குரிய தெய்வமாகக் கருதப்படுகிறான். காமனைப் பற்றிய குறிப்பு பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. தமிழகத்தில் பழங்காலத்தில் காமவேளுக்கெனத் தனிக்கோயில் 'காமவேள் கோட்டம்'

என்னும் பெயரில் இருந்ததைச் சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய இலக்கியங்கள் காட்டுகின்றன. அழகுக் கடவுளான காமனுக்கு அழகே வடிவான இரதி மனைவியாவாள்.

நகரங்களிலும், சிற்றூர்களிலும் காமதேவன் வழிபாடு காமன் பண்டிகை என்னும் பெயரில் நடைபெற்று வருகிறது. காமனுக்குத் தனிக்கோயில் அமைந்திருக்கும் இடங்களில் உள்ள விளக்கு மாடம்போன்று அமைப்பினுள் மன்மதன் உருவம் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கும். கோவிலின் முன்பு கொடிமரம் நடப்பட்டிருக்கும். அம்மரத்தின் மீது உயர்த்தப்பட்ட வெள்ளைக் கொடியில் மன்மதன் இரதி ஓவியம் வரையப்பட்டிருக்கும். கொடி ஏற்றிய ஒரு மாதத்திற்குப்பின் காமன் பண்டிகை நிகழும். அந்நாள்களில் கோயிலில் ஒரு வேளை பூசை, பொரிகடலை முதலியன படைத்து நடத்தப்படும். தனிக்கோயில் இல்லாத இடங்களில் தெருமுனைகள், தெருச்சந்திகள் ஆகிய இடங்களில் அப்போதைக் கான மேடை அமைத்து, அதில் கரும்பு முதலியவற்றை நட்டு வைக்கோற் பிரியினால் அதன் அடியினைச் சுற்றி வைத்து விழாக் கொண்டாடி விழாவிற்குப்பின் அதனை எரித்து விடுவர். தமிழகத்தில் பங்குனி மாதம் பௌர்ணமி நாளில், விழாவிற்குக் கால்கோள் செய்வர். விழா பொதுவாக ஏழு நாட்கள் நடைபெறுவது உண்டு. ஒரு திங்களும், அதற்கு மேலும், அது தொடர்வது உண்டு. விழாவின் பின்னர் மழைபெய்யும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது". (வாழ்வியற் களஞ்சியம், பக்: 148–149)

இந்நிகழ்வின் இறுதிச் சடங்குகள் பெரும்பான்மை கிராமப்புறங்களில் மழைவேண்டி நடத்தப்படும் 'கொடும்பாவி எரிப்பு'

போன்றே உள்ளது. மேலும், இம்மன்மதன் விழாக்காலத்தில் அவன் பற்றிய தெருக்கூத்துகள் நடத்தப்படும். மன்மதன் இரதியின் உருவம் வரைந்த ஓவியம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இரதி மன்மதனாக இருவர் வேடம் புனைந்து ஊர்வலத்தோடும் வருவர். கோயிலாக அமைந்த இடங்களில் விழாக்கொண்டாடும் போது வேடம் பூண்டோர் ஓவியத்தின் முன்னர் அழுவதுபோல நிற்பர். இது மன்மதன் இறந்தமைக்காக வருந்தும் குறிப்பினைக் கொண்டதாகும். விழா இறுதியில் தெருச்சந்தி மேடையில் நடப்பட்ட கரும்பு வடிவில் நிற்கும் மன்மதனைத் தீயிட்டு எரித்துச் சாம்பலை ஆற்றில் கரைத்து நீராடி மீள்வர். மன்மதனை எரித்த சிவனின் திருவுருவத்தை காமாரி என்று அழைப்பர்.

காமக்கடவுளாகிய மன்மதன் கரும்பை வில்லாகவும் வண்டுகளை நாணாகவும் மலர்களை அம்புகளாகவும் மங்கையரைப் படையாகவும் தென்றலைத் தேராகவும் கொண்டு விளங்கும் அழகனாவான். இவன் சிவபெருமானால் எரிக்கப்பட்டது பற்றிப் புராணங்களில் கூறப்பட்டுள்ளதை அப்புராணச் செய்தியின் அடிப்படையில் மன்மதன் இறந்தான் என்றும், இறக்கவில்லை என்றும் கூறும் இரு கொள்கைகள் வாய்மொழி வடிவங்களில் உருவாயின. அதன் அடிப்படையில் வாதமிடுவோர் எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று இருவகைப்பட்டனர். இந்த நிலையே நாட்டுப்புறப் பாடல் வடிவங்களில் ஒன்றான லாவணிப் பாட்டு முறைக்கு அடிப்படையானது எனலாம். இவ்விருகட்சியினரும் தம் வாதங்களை இசைக்கருவிகளுடன் இடத்திற்கேற்பப் பாடும் இசைப்புலமையுடன் இசைபாடி வாதிடுவர்.

வாதிடும் பாங்கில் அமையும் இப்பாடல்கள் இசைவகை சார்ந்த வில்லுப்பாட்டு வாய்மொழி வடிவமாகவும் திகழ்கிறது. வாய்மொழிப்பாடலாக விளங்கிய இந்த லாவணிப்பாடல்கள் இன்றைய காலங்களில் எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று மன்மதன் பற்றிய கதைகள் கூறுவனவாக வாய்மொழி வடிவில் அச்சிடப்பெற்றுள்ளன. இரு கட்சியிலும் வாதிடுவோர் புராணம், இதிகாசம், சமயம், தத்துவம், சாத்திரம் போன்ற புலமைத்துறையில் வல்லவர்களாக இருந்ததோடு இசையோடு தாமே கவிதை இயற்றிப்பாடும் கவிஞர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. சிற்சில இடங்களில் இம் மன்மதன்விழா தெருவின் ஒரு பகுதியில் குறிப்பாகச் சந்திகளில் மேடை அமைத்து வைத்து அதற்கு முன்பு பெருக்கிக் கோலமிட்டு வைப்பர். பயறு போன்ற தானியங்களை அவித்துப் படையலாக வைப்பர். பூசையின் பின்னர்ச் சுற்றுகளைக் கொளுத்தி எரிப்பர். பிறகு இப்படையற் பொருளை மக்களுக்கு வழங்குவர். இவ்வாறு எளிய முறையில் இப்பண்டிகையைக் கொண்டாடுவதும் உண்டு. (இரா, குருநாதன், வாழ்வியற் களஞ்சியம், பக்: 148–149)

இவ்வாறாக மன்மதனுக்கு ஆண்டுதோறும் பல்வேறு இடங்களில் சிறப்பாக விழா நடத்தப் பெறுகின்றது. இருபாலரும் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். இவ்விழா மூலம் மக்களுக்கு மழைவரும் என்ற பொதுவான நம்பிக்கை ஒரு புறமிருந்தாலும் பெரும்பான்மை மன்மதன் விழா எடுப்பது பெண்கள் தனக்கு நல்ல கணவனாகத் தர வேண்டும் என்பதும் அவன் அவளிடத்தில் அன்புடனும் பிரியாமலும் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை

மேலோங்கியே வழிபடுகின்றனர். மேலும், இவ்விழா இளவேனில் காலங்களில் நிகழ்த்தப் பெறுகின்றது. அதற்கு சான்றும் இலக்கியங்களிலும் காணப்பெறுகிறது. இளவேனில் இன்ப நுகர்ச்சிக்கு சிறந்த காலமாகக் கருதப்படுகின்றது. இக்காலம் ஒய்வு நாள்களாக உழைப்பவர்களுக்கு இருந்ததால் இக்காலங்களில் சிறப்பான விழாக்களை மக்கள் ஏற்படுத்திக் கொண்டனர். மேலும், மன்மதன் விழாவின் போது படைக்கப்படும் படையல்கள் யாவும் சிற்றின்ப நுகர்வைத் தூண்டக்கூடிய அளவிலேயே படைக்கப்படுகின்றன. (பயறு, வகைகள், ஐந்து வித பூக்கள்) மேலும் இவ்விழாவின் போது பெண்கள் நல்ல கணவனை மணம் செய்து கொள்ள எண்ணி இவ்விழா நாட்களில் தம்மால் இயன்ற தானங்களையும் தருமங்களையும் செய்வர். இவ்வாறு செய்வதால் தம் விருப்பம் நிறைவேறும் என்றும் நம்புகின்றனர்.

மேற்கண்ட இந்நம்பிக்கைக்குக் கலைக்களஞ்சியம் சான்று பகர்கின்றது.

“இந்தியாவில் எல்லா இராச்சியங்களிலும் காமன் பண்டிகை நடைபெறுகிறது. இது ஏழு நாள் நடைபெறும் என்பர். சிறந்த காதலனைத் தமக்கு அருளவேண்டும் எனவும், தம் காதலன் தம்மிடத்தே அன்புடன் பிரியாமலிருக்க வேண்டும் எனவும் பெண்கள் காமனை வழிபடுவது வழக்கம். சிலப்பதிகாரத்திலே தேவந்தி என்பவள் கண்ணகியிடம் “சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் குளங்களில் முழுகிக் காமவேள் கோட்டம் சென்று வழிபட்டால் கணவனோடு இன்புறுவாய்” என்று கூறியதாகவும் ஆனால், தகுதியன்றெனக்

கண்ணகி அதனை மறுத்துவிட்டதாகவும் வருகிறது. இராசகிரியம் என்னும் நகரிலே இவ்விழா நடந்ததாகப் பெருங்கதை கூறுகிறது. சுரமஞ்சரி என்பவள் சீவகனே கணவனாக வரவேண்டுமெனக் காமனை வழிபட்டாள் என்று சீவகசிந்தாமணி கூறுகிறது." (கலைக்களஞ்சியம், பக் : 512–513) என்பதன் மூலம் மன்மத வழிபாடு மீது பெண்கள் கொண்ட நம்பிக்கையினை அறிய முடிகின்றது.

இவ்விழாவின் போது தெருக்கூத்து மட்டுமின்றி, பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்ற சொற்போர்கள் புராணச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எரிந்த கட்சி, எரியாத கட்சி, லாவணிப் போன்றும் நிகழ்த்தப்படுகின்றன. இவ்விழா தமிழகம் மட்டுமின்றி பிறமாநிலங்களிலும் நிகழ்த்தப்படுகின்றது. கேரளப் பெண்கள் மன்மதன் எரிந்த விழாவினை ஆண்டு தோறும் கொண்டாடுகின்றனர். வட மாநிலங்களில் இவ்விழா ஹோலி (Holi) பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. ஹோலி பண்டிகைக்கும் மன்மதன் பண்டிகைக்கும் முக்கிய வேறுபாடு ஒன்றும் இல்லை. மன்மதன் விழாவில் பூசைக்காலத்தில் நாட்டியம், பாட்டு நடைபெறும். செந்தூரப்பொடி, குங்குமப்பூ, பூவரச மலரிலிருந்து தயாரிக்கப்பட்ட வண்ணக் கலவை பூசைப்பொருளாகக் கொள்ளப்பட்டது. இதே போன்று பொடித்தூவல் முறையை ஹோலி பண்டிகையில் பயன்படுத்துகின்றனர். மேலும், இவ்விழாவோடு மதன மகாவிழா (மதனசதுர்த்தி), மதன திரியோதசி, சித்திரை பதிமூன்றாம் நாள் விழா ஆகியவை கொண்டாடப்படுகின்றன.

மன்மதனுக்காக பெண்கள் நோன்பு இருந்ததை கலித்தொகை, சிந்தாமணி, பெருங்கதை, நாலாயிரதிவ்ய பிரபந்தம் முதலியவற்றின் மூலம் அறியமுடிகின்றது. கலித்தொகை பெண்கள் பால் கொண்டு காமனை வழிபட்டனர் என்றும் சுரமஞ்சரி சீவகனைத் தான் மணந்தால் காமனுக்கு மீன் கொடியும், கரும்பு வில்லும், தேரும் நேர்த்திக்கடனாக செலுத்துவேன் (சீவக சிந்தாமணி–2057) என வேண்டிக்கொண்டதிலும் காமன் தம்பி சாமன் மக்களால் வணங்கப் பெற்றிருக்கிறான் என்பதை நாச்சியார் திருமொழியிலும் அறிய முடிகின்றது. (முதல் திருமொழி–1) இச்சடங்குகள் வாய்மொழி மரபிலும் காணப்படுகிறது. புத்தமதத்தினர் மன்மதனைத் தீய கடவுளாகக் கருதினர். சமண மதத்தினரும் அவ்வாறே கருதினர். காமம், பிறப்பு ஆகியவற்றிற்கு காரணமாக இருப்பதால் வெறுத்தனர். இருப்பினும் நோன்புகள் மேற் கொண்டனர். மன்மதனுக்கு நோன்பு இருப்பவர்கள் பெரிதும் பெண்களே ஆவர்.

**மன்மதன் கோயில்கள்:–**

மன்மதனுக்கு கோயில்கள் இருந்ததை சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெருங்கதை இன்னபிற இலக்கியம், புராணங்களின் மூலமும் அறிய முடிகின்றது. இன்றும் தமிழகத்துத் திருக்கோயில்கள் பலவற்றில் மன்மதனுக்கும் இரதிக்கும் அழகிய சிற்ப உருவங்கள் இருப்பதைக் காணமுடிகின்றது. அவற்றுள் குறிப்பிடத்தக்க அழகுடையதாகத் தென்காசிக் கோயிலிலும் தாடிக்கொம்பு அழகிய பெருமாள் கோயிலிலும் திருமெய்யம் சத்திய கிரீசுவரர் திருக்கோயிலிலும் ஆவுடையார் கோயிலிலும் காணப்படுகின்றன. தஞ்சை பெரிய கோயிலில் 'தட்சிணாமூர்த்தி சிற்பத்தில்' மன்மதன் சிவனை

வெற்றி கொண்டதாக வடிக்கப் பெற்றிருக்கிறது. 14ஆம் நூற்றாண்டு விஜயநகர 'விருபாச்சக் கோயில்' சுவரொன்றிலும் இக்காட்சி ஒவியமாகக் காணப்படுகின்றது. வட இந்தியாவில் மன்மதனுக்குக் கோயில்கள் இருந்ததாக இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன. குசாணர் காலத்தைச் சார்ந்த காமதேவன் சிற்பமே மிகத் தொன்மையானது. புவனேசுவரம், அவந்திப்பூரி, ஆபாநேரி முதலிய இடங்களில் உள்ள கோயில்களில் உள்ள மன்மதன் சிற்பம் சிறப்புடையவை. இவைத்தவிர்த்து வட இந்தியாவிலும் பல்வேறு இடங்களில் மன்மதன் சிற்பங்கள் காணப்படுகின்றன.

மேலை நாடுகளில் மன்மதனைக் கிரேக்கர்கள் 'இராஸ்' என்றும் ரோமானியர் 'கூப்பிட்' என்றும் அழைப்பர். இவன் போர்த்தேவனாகிய மார்ஸீக்கும், காதல் தெய்வமான வீனஸீக்கும் பிறந்தவன். இவன் அம்பு பட்டவர் காதல் கொள்வர். இவனுடைய உருவம் ஆடையின்றிப் பொற்சிறகுடைய அழகான சிறுவனாக அமைக்கப்படும். இவன் இதழ்களில் புன்முறுவல் தவழும். இவனிடம் வில்லும் அம்பறாத்தூணியும் உண்டு. இவன் ஒரு சமயம் தன் அம்பினால் தானே தாக்கப்பட்டதால், பூலோக இளவரசியாகிய சைக்கி என்பவளிடம் காதல் கொண்டான். இவனைக் காதலிப்பதற்காகத் தேவர்கள் சைக்கிக்கு இறவா வரம் அளித்தனர். (கலைக்களஞ்சியம், பக்: 512–513)

இவ்வாறாக மன்மதன் கோயில்கள் உலகம் முழுவதும் பரந்துள்ளமையைச் சான்றுகள் மூலம் அறியமுடிகின்றது. இதற்குக் காரணம் மன்மதன் இன்பத்தைக் கொடுக்கும் கடவுள் என்ற

நம்பிக்கையின் பொருட்டு மக்களிடையே பெருஞ்செல்வாக்கு பெற்றுள்ளான். மேலும், சைவம், வைணவம் என்ற இரு சமயங்களிலும் இவன் வளர்ச்சிக் கொண்டுள்ளதால் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால் அனைவருக்கும் வழிபாட்டுக் கடவுளாக மாறியுள்ளான். மேலும் இவன் பொருட்டு சைவ, வைணவ சமயப்போர்களும் நிகழ்ந்துள்ளதை வாய்மொழி வடிவப் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

**மன்மதன் தமிழ் மரபுக் கடவுளா?**

மன்மதன் தமிழ் மரபில் வழிப்படக்கூடிய கடவுளா என்று பார்க்கும் பொழுது பெருத்த சான்றுகளைக் கொண்டு இல்லை என்று நிறுவலாம். ஏனெனில் அவன் வடமொழிப் புராணங்களின் ஊடே தமிழில் கலந்த ஒரு கடவுள் ஆவான். எவ்வாறு வடமொழியில் இயற்றப்பெற்ற வால்மீகி இராமயணம் தமிழில் கம்பன் மூலம் தமிழ் மரபின் ஒரு இலக்கியமாக உருவெடுத்து நிலைத்துக் காட்டப்பட்டுள்ளதோ அதே போன்றுதான் மன்மதனின் கதையும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

“வடமொழி இலக்கியங்களில் தொன்மக் கதைகள் மிகுதி. இந்திய மொழி இலக்கியங்களிலும் கலைகளிலும் வடமொழியில் வழங்கி வரும் தொன்மக் கதைகள் கலந்துள்ளன. தமிழ் மொழியில் தொன்மங்கள் வளம் பெற்ற நிலையில் இல்லை. தமிழில் தொன்மச் செல்வாக்கு குறைவு” (தமிழண்ணல், 1986, பக்: 234–235) என்ற கூற்றின் மூலம் வடமொழித் தொன்மங்கள் அனைத்து இலக்கியங்களிலும் வியாபித்து இருப்பதை அறியமுடிகின்றது.

மன்மதன் தமிழ் மரபுக் கடவுள் இல்லை என்பதற்கான ஆதாரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

– நமக்கு கிடைக்கும் முதல் நூலான தொல்காப்பியத்தில் காமம் என்ற சொல்லாட்சியே காணப்படுகிறதே தவிர காமன், மன்மதன் பற்றிய எக்குறிப்புகளும் காணக்கிடைக்கவில்லை.

– சங்க இலக்கியங்களில் கலித்தொகை, பரிபாடல், பட்டினப்பாலை, திருக்குறள் ஆகிய நூல்கள் தவிர, பிற சங்க இலக்கியப் பாடல்களில் காமன் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. இருப்பினும் இவற்றுள் இடம் பெறக் காரணம், கலித்தொகையிலும் பரிபாடலிலும் காமன் தவிர்த்து வடமொழிப் புராண மரபுக் கதைகள் பலவும் இடம்பெற்றிருக்கின்றன. திருக்குறள், பட்டினப்பாலையில் குறைந்த நிலையிலேயே சான்றுகள் காணப்படுகின்றன. இக்காரணத்தால் இது ஆரியர்களின் கலப்பால் நிகழ்ந்த மாற்றம் எனலாம்.

– தமிழ்க்கடவுளாகக் கருதப்படும் முருகனின் தோற்றமாக மன்மதனைக் கருதுவதால் மன்மதன் பற்றிய தொன்மங்கள் பலவாறு தமிழகத்தில் பரவின.

– வடமொழியில் மன்மதனை சிவன் கயிலையில் எரித்தாக வடமொழிப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. அதை அப்படியே உள்வாங்கி தமிழகத்தில் மன்மதன் எரிந்த இடமாக சிவனுடைய எட்டு வீரச்செயல்களுள் ஒன்றாகக் கருதப்படும் திருக்குறுக்கை வீரட்டத்தில் சிவன் எரித்ததாக புராணங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. மேலும்,

இச்செய்தியை நிலைநிறுத்துவதற்காக அவ்வூரின் பெயர் காமதகனபுரம் என்றும், அத்தலத்துச் சபை காமனங்கநாசனி சபை என்றும் கருதப்படுகின்றது. அங்குள்ள வீரட்டேசுரசுவாமி கோயிலில் மாசி மாதத்தில் காமன் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வடமொழி மரபினைத் தமிழ் மரபாக மாற்றிக் கொண்டு தலபுராணங்கள் உருவானது சிந்திக்கத்தக்கதாக உள்ளது.

– ஏற்கனவே உள்ள சிறு சிறு தமிழ் வாய்மொழிக் கதைகள் ஊடே இம்மாதிரியான வடமொழிப் புராணக்கதைகள் உள்வாங்கப்படும் போது இயல்பான ஒரு தமிழ்க்கதை மரபாக இவைகள் உருவாகிவிடுகின்றன. மேலும், பங்குனி முயக்கம், தைந்நீராடல் போன்ற இலக்கியம் காட்டும் சடங்குகளை மன்மதனோடு தொடர்புபடுத்தி ஆய்வாளர்கள் தமிழ் மரபாக ஒப்புமைப் படுத்தி விடுகின்றனர்.

– மன்மதன் இன்பத்தை அளிக்கும் கடவுளாகக் காலூன்றியதால் தமிழ் மக்களிடையே எந்தவித கேள்வியும் இன்றி இயல்பாக மனதில் பதியும்படி ஆகிவிட்டது. ஏனெனில் மக்களுடைய எண்ணங்கள் எதை இழந்தும் இன்பத்தைப் பெற வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் அந்த உளவியலைக் கொண்டு ஆரியர்கள் மன்மதனைப் புகுத்தியுள்ளனர்.

– சைவ வைணவ சமயப் போர் நிகழ்வதற்கு இம்மன்மதனும் இரதியும் முறையான பகடைக்காயாக பயன்படுத்தி தங்களுடைய ஆதங்கங்களை எதிர் சமயத்திற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

– மேலும், மன்மதன் குறித்த ஒரு நிலையான பிறப்புச் செய்தியை எந்தப் புராணமும் ஒழுங்காகக் குறிப்பிடவில்லை. திருமால், தருமன், பிரமன் என்று யார் யாரின் மகனாகவோ கட்டமைக்கப்பட்டுப் புராணங்கள் எழுந்துள்ளன. இந்த நிலையை விளக்கும் வாய்மொழிப் பாடலும் தமிழ் மரபில் உண்டு.

"மால் மகன் மதனென்குதொரு புராணம்
மலர்வேதன் மகனென்குதொரு புராணம்
மால்வண்ணன் மகனென்குதொரு புராணம்
தர்மன் மகனென்குதொரு புராணம்
சால்கண்ணன் மகனென்குதொரு புராணம்
சங்கல்பன் மகனென்குதொரு புராணம்"

(தமிழில் காமன் பாடல்கள், பக்: 12)

என்று பலவாறு மன்மதன் தகப்பன் பெயரில் பல குழப்பங்கள் காணும் வகையில் புராணங்கள் இயற்றப்பட்டுள்ளன.

– சைவ, வைணவச் சமயப் போருக்கு காரணமாக இருந்த மன்மதன் இரதி மூலம் ஒற்றுமையும் இரு சமயத்திற்கு ஏற்பட வழிவகையும் செய்தது. மன்மதன் காரணத்தினால் தான்

'அரியும் சிவனும் ஒண்ணு
அறியாதவர் வாயில் மண்ணு'

என்ற பழமொழியும் உருவாயிற்று.

இவ்வாறாக இலக்கியங்கள், புராணங்கள் என்று தமிழ் மரபில் கலந்து வந்த மன்மதன் இன்றைய சூழலில் நாட்டுப்புற வடிவங்களில் நிகழ்த்துகலைகளில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்து சிறு தெய்வமாகவும் வழிபடத் தொடங்கியுள்ளனர். இப்படியாக வடமொழியில் வந்த மன்மதன் பல்வேறு ஆதாரப்பூர்வமான தமிழ்க்கலப்புகளில் இடம் பெற்றுள்ளார். தமிழ் மரபாக மாறியுள்ளார். இருப்பினும் மன்மதன் வரவு வடமொழி மரபே எனலாம். தமிழ் மரபு அல்ல. ஆரியர்களின் வரவால் தமிழ் மரபாக தமிழ் மக்களிடையே இப்போது இருக்கும் பெருந்தெய்வங்கள் போன்று ஏற்கப்பட்டுள்ளார். சிறு தெய்வமாக வழிபடும் மரபும் காணப்படுகிறது. மன்மதனுக்கு என தனிக்கோயில்கள் கிடையாது. பெருங்கோயில்களில் சிற்பங்களாக மட்டும் ஒரு சிறு இடங்களில் இடம் பெற்றுள்ளது. மன்மதனால் பல்வேறு வகையான நாட்டுப்புற நிகழ்வடிவங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் லாவணிப்பாட்டு, வில்லுப்பாட்டு, கூத்துப்பிரதிகள், ஒப்பாரி முதலியவை வாய்மொழி வடிவங்களில் செல்வாக்குப் பெற்றனவாகும்.

இவ்வாறாக நீண்ட ஒரு பாரம்பரிய வரலாற்றை இலக்கியங்களிலும் புராணங்களிலும் வேதங்களிலும் நாட்டார் வடிவங்களிலும் இடம்பெற்ற மன்மதன் பற்றி இவ் ஓலைச்சுவடி குறிப்பிடுவதும் ஒரே கதைக்கருவைக் கொண்டதாக அமைகின்றது. மன்மதன் இறப்பதற்குக் காரணம் தேவேந்திரனும் பிரம்மனும் காரணமென்பதை நிறுவுகின்றன. சிற்சில இடங்களில் மகுடமுடி, இரதிபுலம்பல், இரதிதற்க்கம் என்று பல்வேறு தலைப்புகள் இட்டு பாடப் பெற்றுள்ளன. பேச்சுவழக்கில் பாடல்கள் இயல்பாக அமைந்துள்ளன. வருணனைகள் மிகவும் தெளிந்த நீரோடைப் போன்று பெரும்பான்மை மோனை எழுத்துப் பெற்று

அமைந்துள்ளன. மன்மதன் இறந்ததற்கான காரணம், அவன் தகப்பன், அவன் மனைவி, மாமனார், இன்னற தேவர்கள் , தெய்வங்கள் பற்றிய சான்றுகளும் காணக்கிடைக்கின்றன. மாயாபுரி, ஆரோக்கியாபுரம், அளகாபுரி ஆகிய ஊர்ப் பெயர்களும் மன்மதனுடன் தொடர்புப் படுத்திக் காட்டப்பட்டுள்ளன. இவை தமிழ்நாட்டுப் பெயர்கள் போன்று தெரிகின்றது. கிளைக்கதைகள் பற்றிய குறிப்புகளும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. அவற்றுள் உள்ள நயங்களும் சிறப்பும் ஆய்வுரையில் எடுத்துக்காட்டப்படவில்லை. காண்போர் முழுதும் படித்துப் பயன்பெறலாம். படிப்பவர்க்கு இன்பம் பயக்கும் வகையில் இந்த மன்மதன் ஒப்பாரி நயங்களோடு திகழ்கின்றது.

## மன்மதன் ஒப்பாரி

### சிவமயம்

மதுவுண்ணும் வண்டடியோன்

மங்கையரே ஒண்ணழகு

வளரும் பிறக்கினியாம்

மாதரசே ஒன் வதனம்

வருவிர்தனை செயிக்கும்

வாகுள்ள மெல்ப்புருவம்

வசந்தந் தன்னப் பளிக்கும்

மடமயிலே ஒன் விளிகள்

வள்ளல் தண்டொக்குமடி

மாதரசே ஒன் செவிகள் 1

### மகுடமுடி

துலங்கு வண்டுனால் நான் பூண்டகண்டு மொளியரனே

மகரக் கொடித்துலங்கும் நகருக்கதிப்பதியேயம்

மனுநெறிகள் தவறாத சணுர்சந்துர்ச்சணனே

மானுங் கலையது போல மஞ்சைமிசை கூடி

கொஞ்சி விளையாடி வாழுகிண்ட நாளையிலே

தாள்வு வருவதுண்டோ மன்மதராசே. 2

மனக்கார மானமணி

மருசுத்த மானமணி

வல்லானை யானமணி

வண்டூரும் பூங்காவனத்தில்

வாசங்கொள்ளும் பூமணியே

வாசம் அடைந்த மணி

மஷ்த்தகத்தில் நிண்டமணி

மணிமார்பன் ராவுணனை

மாரைப் புளைந்த மணி

வாலியுடன் தன் மார்பில்

வர்ணத் தாலெயிதமணி

மணியிலத் தெரித்த மணி

மண்டலத்தே வெண்டமணி

மகமாது பெத்தமணி

மாசடையாள் நீலமணி

மச்சினார் ஆன மணியெங்கே

மறந்தொளிந்து போனாயோ

மணவாள ரானமணி

மணக்கோலமஞ் செயிதமணி

வயிகொண்ட (வைகுண்டம்) போனமணியும்

அமந்திருந்த பாவினைபோல

அடியாளை யிங்கேவிட்டு

ஆதிரு மேடையின் மேல்

அமந்து யிருயெண்டு

அமர சபைபோன சபைபோன

அழகுள்ள மன்மதரும்

அனலாய் யெறிந்தாரோ

அய்யோத் தெரியவில்லை

அனலாய்க் கொளுத்துதடி
அக்கினி போல பத்துதடி
ஆச்சியரெ யென்ன செய்யிவேன் யெண்டு
அடிச்சு பிரண்டழுதாள்
அன்னரதி தேவியரும். 3

காணாக் கருங்குயிலே
கருமேக நீலவண்டேக்
கண்ணுக்குத் தாரவே
கலங்காத ரத்தினமே
கனக ரெத்தின காந்தியடி
கல்லிளைத்த வில்லயடி
காந்தும் சந்திரோகையடி
கானமயிலச் சாயலடி
கருங்குயில் மேகமடி
கானகத்து வண்டடி ஒன
கலங்கி வருமச்சமடி
கட்டி முத்தாரமடி
சந்தோஷத்துடன் –
கணங்காச்சிலா யிருந்தால்
அகலமான ஞாயமல்ல
காந்தி திருமண்டபத்தில்
கட்டி முத்தே நித்திரை செயி
கலங்காதே யென்றுரைத்தான்

கயலழகன் மன்மதரும்
கடுஞ்செனத்தில் படுத்து. 4

செந்தாமரை முகமும்
சிவந்த முத்து பல்லொளியும்
சிகலோது கண்ணுகளும்
சிலமான உதடுகளும்
சிரையெடுத்த ஒனான்போல
தீர்க்கமுள்ள மூக்குகளும்
செவ்வி ரெண்டும் வெள்ளையடி
செவ்வியரே ஒந்தனுக்கு
செகரி மேகமடி
சீமாட்டி ஒன் கூந்தல்
செம்மலரு மங்கையி அசையச்
செய்தாளை ஒன் வதனம்
செந்தணல் முளியாலே
செம்பகப்பூ மாந்துளிரே
செந்தூர மத்ததொரு யிந்திரநாதன்
சபைக்கி யெழுந்திரிந்து
சீக்கிரமாமுங்கே வந்து
செப்பு முலையாச் சோலையிலே
சீகரெத்தின மாளிகையில்
செம்பகப்பூ ஊஞ்சலிலே
செந்து முருப்பமடி

சித்தூர்பய ரெசீகரே
ரத்தின சந்தனமே. 5

கற்பகமே மேற்ப்பொருளே
கருணைக் கடலமுர்தே
கண்ணுக்குக் கண்மணியே
காமத்து ரத்தினமே
கலியாண சிங்காரமகங்
கனுங்கட்டி யென்னை
கையிபிடித்துக் கண்ணாளா
காரியம் நீர்ச்சொல்வதெல்லாம்
கபடில்லை உள்ளதுதான்
காரிகையாள் நான்பாவி. 6

கட்டழகா உம்மைவிட்டு
கனுபொத்திருந்தாக் கால்
கலைபயிரிந்த மானம் போலும்
கண்டிழந்த ஆவினம் போல
கனக மந்தனைப் பிரிந்த
கானகத்து அண்டிலைப்போல
கனவு கண்ட ஊமையைப் போல
கய வாவிவிய கண்ட
கானமயில் அன்னம் போல
கலங்கி பரவித்து

காரிய மெல்லாந் தங்கள்

கருத்திலத் தெரிந்திருந்து

கற்ப்பக பஞ்சகர்த்தாள்

குடியிருந்து

பாங்காய் அரசமரமும்

பலபாண்ட குப்பையிது

பகுந்தரிய மட்டாமல்

பஞ்சதரு மயிந்திற்க்கு

பளுமொழி உரைப்பேனென்று

பாலுமஞ்சல் மதுபோல

பாவித்திரிந்தவர்க்கு யென்னா

பளுதுவந்து நேந்துகாண்

பஞ்சபாணம் படைத்த

பஞ்சவர்க்கு தூதுசென்ற கஞ்சனே

நெஞ்ச பிளந்த கரியாமல்

கடலாழிக் கண்மணியே. 7

ஆயன் மகனாரை

அழகு ரெத்தின சிரோமணியே

ஆண்டவனே சொல்லுரேனங்கேள்

உம்மை தேவாதிதேவர்கள்

சினத்தில் அழைத்துவர

சேதி சொல்லி யெங்களையும்

யெங்களை தூதனுப்பி

வைய்த்தார் காண்

அவர் சேதிகளைக் கேட்டு

நாங்கள் திறமாக ஓடிவந்தோம்

மனுஞ்சேந்து வந்திரானால்

யெங்கள் சாபலியூவாள்

சீக்கினவே ஆகுமென்று

சேதி சொன்னார் மன்மதருக்கு

தேவர்கோன் தூதர்களும்

திறமுடனே அந்நேரம். 8

காமனை உம்முடைய

கபடுமரிய வெகுகாரியங்கள் சொல்லி

கட்டழகா தேவரெல்லாம் உரு (25?)

காரியங்கள் உம்முடன்

கண்டு சொல்ல வேண்டுமெண்டு

கற்ப்பிக லிந்திரனும் யெங்கள்

கற்ப்பத்திலுரைத்து ஒரு

காரியங்களாக

கருத்தா அழைத்தார் காண்யிது

காரியம் மெண்டெண்ணி

கனமாக வந்திரானால் யெங்கள்

காயங்கள் மோட்சம்

கயிலாசமரு சேந்துடுவோம்

காமனை யென்னயிலும்

யிந்தபடியாய் தூதுவர்கள்

மன்மதர்க்கு யினிச்சொல்லும் வேளையிலே

அப்போது மன்மதரும்

ஆளழகன் யேது சொல்வார்

அல்லவே தூதர்களே

அன்பாகச் சொல்லுறேனங்கேள்

அந்த அமுர்தங் கடைந்த

அண்ட முனிதேவர்கள் யென்னை

அழைத்துவர சொன்னாரென்று

அறிக்கையிட வந்தார்களே

*அவர்களென் வினைத்தான் வினைத்தா நான்

* இந்த அடி புரியவில்லை. சுவடியில் உள்ளபடி கொடுக்கப்பட்டுள்ளது.

அதிக பலன் பெத்திடுவேன்

அச்செனத்தில் தேர் நடத்தி

உங்களறுகாக வந்துடுவேன்

நீங்களஞ்சாதே யெண்டு

தூதுவர்க்குச் சேதி தன்னை

அகமகிழ்ந்து தானுரைத்து

அச்செனத்திலத்தில்

மன்மத ராசனுந்தான்

அன்பாகத் தானுரைத்தார். 9

யெனமரிந்த முந்தரரும்

யேச்சராள் சேவுகனே

யிச்சினமே தானழைத்து
யிழுத்து வாவென்று சொல்லியெம்
தூதர் தானடந்து
யின்பமுள்ள மன்மதனார்
யிசைந்ததொரு மாளிகைக்கி
யெழுந்திரிந்தாலப்போலச்
சேந்துயிகயோசனை யரிந்து
யின்பம் அரிக்கரா முங்கே
வாவென்று சொல்லி
யெழுதின வாசகத்தை
யெடுத்து கையிலத்தான் குடுத்து
ஶ்ரீமது சகல குணசம்பரான்
யிந்தபடியாக உம்மை
இட்டுவரச் சொன்னாரெண்டு
யெளிழகன் மன்மதர்க்கு
யின்பமுடன் வார்த்தை சொன்னார்
யெழிலான தூதுவர்கள்
யின்பமுடன் நேரம்
இனிச் சொல்லும் வேளையிலே. 10

யிந்த சேதிதான் கேட்டு
யின்பம்முள்ள மன்மதனார்
யிகயோசினைகள் பண்ணி
யிருக்கட்டுமெண்டு சொல்

யின்பம் ரதி மாளிகைக்கு

எழிலாக மன்மதரும் யேக

சந்தோஷத்துடன் யிணங்கனமத்தச்சன்

யின்பம் திருநுதலில்

யேகு மங்கஷத் தூரிபொட்டணிந்து

யிரு கணங்களுக்கு

யின்பம் அருகதுபோல

யியல்பான மயிகளிட்டு

யின்பமுடன் பாகுகட்டி

யின்பச் சரச்சாவும் வைய்த்து

யின்பம் மணிக்கடுக்கன்

யியலான காதிலிட்டு

யிமய பதைத்தாமிட்டு

யின்பமாயி மார்பிலிட்டார்

யிக சர்ச்சாமுகம் வைய்த்த

யிருகைய கடையமிட்டார்

யின்பம் மர்க்கதத்தால்

யிழைந்த சர்ச்சாவும் வைய்த்தார்

யின்பம் நிசாரணிந்தார்

யின்பமங்கள் முதல்யெல்லா மணிந்து

யேக யோசினைகள் பண்ணி

யின்பரதி மாளிகைக்கி

யெளிழகன் வந்தார்காண்

யின்பமுள்ள மன்மதரும். 11

நாயகனை கண்டவுடன்

அன்னரதியாளும் ஓடிவந்து

நமஷ்க்கார மஞ்செய்து

நலமுடனே கயிலாகை

நாயகியாள் தான் குடுத்து

நாயகனே வாருமெண்டு

நாதாந்த பட்சி

நமஷ்க்கரித்தப் பாவினை போல

நமஷ்க்கரித் திருபேரும்

நடந்து மனமகிள்ந்து

நற்க்குயிலு மந்தான மயிலும்

நாகரெத்தின மண்டபத்தில்

நடந்து திரிந்தாப்போல

நலமான அன்ன பட்சி

நாயகனுடனங் கூடி

நயன உல்லாச மதாயிந்த

நச்சுவை பூங்காவனத்தில்

நடந்து விளையாடினாப்போல

நாகரீக கன்னியர்கள்

நன்றாய் வெஞ்சாமரைகள் ரதி மன்மதனுக்கு

நலமாக வீசிவர

நாட்டியங்கள் ஆடிவர

நடநாடக சாலையுடன்

நடந்துமே அப்போது. 12

நவரெத்தின மணிமண்டபத்தில்

நலமான ரம்பை மணி

நயனமாய் ஊஞ்சலின் மேல்

நாங்குதிசை பஞ்சனை மேல்

நல்ல முல்லைப் பொஷ்ப்பமலர்

நலமான மல்லிகையும்

நன்றாயி விரித்ததின்மேல்

ரவை சல்லாமேல் விரித்து

நவரெத்தின திண்டு மெத்தை

நலமான பெண்ரதியாள்

நாயகருக்குத் தானமத்தி

நாயகருமந் தானும்

நவமணி ஊஞ்சலின் மேல்

நன்றாக வீத்திருந்தார்

நயமுடனே யந்நேரம். 13

மங்கையருக்கு கிங்கித மாது ரதியாளும்

மனமகிள்ச்சியாக மலர்மெத்தை மீதிருந்து

மனது சந்தோசத்துடன் மங்கை ரதி தேவியரு

மன்மதருக்கு சந்தனங்கள்

வரல் புழுகு சவ்வாது

மன்மதருக்கு சாத்தியபின்

மணக்குமத்தர் பன்னீரும்

வகை வகையாயி தாம்பூலம்

வாச முடனணிந்து

மல்லிகை முல்லை

மருவு மரிக்கொழுந்து

வாசமுள்ள செண்பகமும்

மான்வெட்டி வேர்களுடன்

மன்மதர்மேல் சாத்தியபின்

மங்கை ரதி கிளியும்

மடித்து இலைச்சுருளை

மன்மதருக்குத்தான் குடுக்க

வாங்கி கனிவாயில்

மதிளச்சியுடன் தானிருந்து

மயிலு மங்குயிலும் போல

மாடைப் புறாவினங்கள்

மகிழ்ந்திருந்தார் வினைபோல

அந்தம் யேசுபற்ற

கோடி முடியில் மங்கையுமை

மாலுடனே மகிள்ந்து விளையாடினாப் போல

மன்மதருந் தானும்

மங்கலமாய் வீற்றிருந்த

மயேஷபரனார் தன் மகளும்

மாறன் திருமுகத்தை

மங்கையரு மந்தான் பாத்து

மனது கலங்கி வாடி மிகச் சோம்பி

மன்மதளர்ந்து யேதுரைப்பாள்

மங்கை ரதி தேவியரும் 14

**... (இவ்வடி சிதிலம்) ...**

**(15,16 பாடல் எண்கள் காணப்படவில்லை.)**

அச்சுதமால் ஈண்டெடுத்த

அமுர்தமே சிங்கார

ஆணிரெத்தின செங்கரும்பும்

அணிவண்டு நாண் னதினால்

அட்டடந்து கணைத் தொடுத்து

அஷ்ட்ட திசைகள் யெட்டும்

ஆகாசம் பூலோகம் அதிலிருக்கும்

சீவசெந்து அனைவர்களும் மையல் தந்து

ஆனந்த மோக வலையதனில்

அகப்பட்ட டழுந்தி

அனேகவித லீலை செய்து

ஆசைக் குழியில் அழுந்தியெழும்பாமல்

ஆள்மை செலுத்துகின்ற

அங்கசவேள் மன்மதரே ஒன்

அஷ்ட்ட லெட்சுமி பொளியும்

அழகு மதிமுகங்கள்

ஆதிச்சனைக் கண்ட கமலம் போல

அழகு முகம் சோம்பி

அல்லி இதழ்ப்போல

அமந்த திருவாயும்

ஆன முல்லை பல்லொளியும்
ஆலிலே போலே அமந்த திருவயிறும்
அன்பாயி அமைந்த திருமேனி
அம்புடனுமைக் கலந்த
அருக்ககளை சொலுமய்யா
அங்கனே யெனங் கணவா. 17

கஞ்சமல ரஞ்சிதனை
கனத்த சிரசு கொய்த
காலகண்ட யீஷ்பர்க்கு பிரம்ம
கபாலம் கையிதனிலே
கடுகன் வந்தவுடன்
கங்காதரனாரும் கபாலத்தே யெடுத்து
கர்த்தனே நிற்க்கையிலே மகாவிஷ்ட்ணு
கருமேக நீலவர்ணன்
காரியமால் நெற்றி
கமலந்தனைக் கீரி
கபாலமதை ரொப்பிவிட்டு
கடவுள்தனை ரெட்சித்து
கமலாயம் மெண்டு
கருணைத் திருநாமமிட்டு
கபடமுள்ள மகாவிஷ்ட்டுணு நாபி
கபாலத்தில் வீற்றிருக்கும்
கன்னி மகாலெட்சுமி தன்

கருவிலு தித்தெழுந்த

கட்டிமுத்து அங்கசனே

கச்சைக் கனியும் மாதர் தன்மேல்

கஞ்ச மலர் வாளிதொட்டு

கன்னி தனை மயக்கி

கடுமோகமந் தானெழும்ப

கன்னி உன்மேல் சிந்தைவயித்து

காதல் கொண்டேன்

கூடி கலந்து நித்திரை செய்தது போல

கட்டழகா ஒந்த முகம்

கதிரோனைக் கண்ட

கமலம்போல தான் வாடி

கலங்கித் திருமேனி யெல்லாம்

கலை மாறி நிற்ப்பானென்

காமனே யெனங் கணவா. 18

பெண்கள் சிரோமணியே

பெண்கள் குலக்குழுந்தே

பெண்கள் சிகாமணியே

யெங்களுக்கு நாயகமே

பெண்கள் வலக்கண்ணே நீ

பெண் (ங்) கிளியே அன்ன

பேடை நவமணியே

பேதை கந்தயிலே

வளர் பெறையே

செழுங்கமல பெண்ணே

நவரெத்தின பேழையே

சீனி பிலரக கனியே

பேரீச்ச மரக்கனியே

பெண்மானை யீசுபரியாள்

பெத்தெடுத்த நற்க்குயிலே

பேரான கந்தனுக்கு

பெறப்பே யினனக்கிசைந்த

பெண்ணனங்கே சொல்லுறேனங்கேள்

பேரான ஆரோக்கியபுரத்தில்

நவரெத்தின பெரிய சின்மாசனத்தில் (சிம்மாசனம்)

பெருமையுடன் தானிருக்கப்

பேய்ப்புகளுமந் தெய்வசபை

பேரான இந்திரரும்

பிணியணுகா தேவர்களும்

பிரம்மாவும ந்தான் கூடியிலமான தூதரவிட்டு

பிரியமுடன் அழைத்தார்

பெண்ணே நானுன்னிடத்தில்

போக வுடை வாங்கவந்தேன்

பெண்ணணங்கே யென்றுரைத்தார்

பெருமா மகனாரும். 19

மகாவிஷ்ட்டுணு யீண்டெடுத்த

மறையோன் படைத்த

புவி வயிகொண்ட வாசகர்

மண்ணுக்கும் விண்ணுக்கும்

மதனையென்று பேர் படைத்து

வர்ணன் மணிக்கரும்பே

வரிவில்லா தான் வளைத்து

வண்டதினால் ணாணி தொட்டு

மலர்ப்பாணு தொட்டதினால்

மகாதேவர்கள் யென்னை

வய்யகத்தோர் தங்கள்

மாதர்கள் சிந்தை

மதிமயங்கி மோக

மயலதனை யெழும்பி

மங்கையுடன் கூடி

மகிமையுள்ள ஒதவிந்து வந்து கலந்து

மக்கள் தனைப் பயிண்டு

மனமகிள்ச்சியாக வாள்க

பயிறேத்தி வையத்து

மாயாபுரி நகரில்

மரகத ஊஞ்சலின் மேல்

மாணிக்க மெத்தையிட்டு

மல்லிகை முல்லை மலர் விரித்து தான் பரப்பி

மலர் மெத்தை மீதிருந்து வண்மையதிகாரம்

மாரணம் செலுத்தி வையத்து
மனமகிள்ச்சியாக
வாழ்ந்துண்டு யிருக்கையிலே
வானவர் லோகமதில்
வாழுந் தேவர்கள்
வானவராசேந்திரனாம் யென்னை
வரவழைத்தாரெண்டும்
வர்ணன் மணி தூதர் மன்னர் மின்னின் ஒடிவந்து
வாருமய்யா யெண்டு சொல்லி
வருந்தி அழைத்தவுடன்
மாதுக்கு சொல்லிவாறேனெண்டு
ஒன்னிடத்தில் வந்தேன் வுடவாங்கி
வானலோகம் போவதற்க்கு
மங்கைரதி தேவியரும். 20

யிந்தபடியாக
யேழுலோக மதிலிருக்கின்ற
சீவசெந்துக்கி சந்துபடியளந்து
யின்பமுடன் பால்க்கடலில்
யேந்திழையாள் லெட்சுமி
யிருதயத்தில் வைய்த்தணைத்து
யின்பமுடன் பள்ளிகொள்ளும்
யேவேஷத்து கண்மணியும்
யிக்குவேள தானுரைக்கும்

யிதை கொட்டு (கேட்டு) யீஷ்பரிதன்

யிருதயத்தில் வந்துதித்த

யிம்ப (யின்ப) ரதியாள் தனக்கு

இருப்பூசி காச்சி

யிருசெவியில் நானடித்து

யிருத்தி வைய்த்த பாவினைபோல

யின்பம் மறந்து

யிருதயங்கள் தான் கலங்கி

யினிச் சுருனை தப்பி

யின்ற ரதி மூர்ச்சை போயி

யெழுந்திரிந்து யேது சொல்வாள்

யிடிமின்னல் சோதியாய் யெங்கும்

நிறைந்த யீஷ்பரனே

யென் தகப்பா

யித்தனை நாளை இல்லாத

யிவ்வார்த்தை யெனங்கணவன்

மன்மதனும் இன்றைக்கி உரைத்ததினால்

யென்ன காரணமோ

யெனக்குத் தெரியவில்லை

யென்று மதராசனிடம்

யின்று திருமுகத்தை

யேரிட்டுதான் பார்த்தால்

யீஷ்பரனார் தன் மகளும். 21

நன்மணி பொன்மணி

நாகரெத்தினம் சீகரெத்தினம்

நல்மணி கோமேதகம்

நல்ல முத்துப்பவளம் நல்பச்சை

நீலரெத்தினம் யிப்படி

நவரெத்தின மேனியுள்ள

நற்கரி புத்திரனும்

நஞ்சுண்ட மகாலிங்கர்

நாதனுடன் வயித்தில்

நன்றாக வந்துதித்த

நாயகியே உந்தனிடம்

நலமாய் மனமகிள்ந்து

நல்மனதுதான் படுத்தி

நாடிவிடாய் கொடுத்தால்

நலமாக இந்திரசபை

நான்போயி வருவனெண்டு

நயமுள்ள மன்மதவேள்

நயமாய் உரைத்தவுடன்

நாராச மங்காச்சி

நடுச்செவியில் விட்டது போல

ரதியாள் அதைக்கேட்டு

நடுங்கி மன்மத வுளத்து

நங்கையணி வேணியர்

நாதனே ஒன் சோதினையோ

நானறியேன் யென்றும் அவள்

நற்ச்சுரணையத்து ரதியாளும் மண்ணில் விளுந்து
நாராயிணன் மகனும்
நாயகியே தானெடுத்து
நல் மார்பில்தான் நணையத்து
நன்றாயிரு செவியில்
நல் சுக்கு வைய்த்தூத
நாயகி சோபந் தெளிந்து
நறுக்கிண் டெழுந்து
நாயகனார் முகத்தை ரதியாளுமந்தான் பார்த்து
நல்லதய்யா யெனங் கணவா
நானுரைக்க கேளு மென்றாள்
நங்கை ரதிதேவியரும். 22

அலைகடல் முரசோன்
அம்பரன் யெனம்படையோன்
வலைக் கரும்பு வில்லும்
அய்ந்து மலர்ப்பாணம் வைய்த்த
ஆசையுடன் எடுத்து
ஆதிமூலத் தேவரையும்
அஷ்ட்ட திக்குப் பாலரையும்
அவனியுள்ளோர்களையும்
ஆட்டிய பம்பரம் போல்
ஆட்டி வைய்த்து நானிருந்து
ஆண்மை செலுத்துகின்ற

ஆளழகர் சித்தசனே நீர்

ஆள்மை அசவுரியத்தால்

அண்டமதில் போறமென்றாள்

அச்செணம் விட்டுந்தன்

ஆரோக்கியா புரத்தில்

அரசு செங்கோல் செலுத்தி

அவுனி தனிலிருந்து

அதிமோக மங்கையர் தன்

நவர்பத்தை யொத்த

அழகுள்ளர் மனையில்

அழகு லீலை செலுத்தி

அனேக விதமாக

அங்கசேன் ஒன் மனது

அனேக சந்தோஷத்துடன் தேவராயாசம் ஒந்தனுக்கு

அணுகா தொரு நாளும் (னாழும்)

ஆனந்த மன்மதனே நீர்

அண்டமதிலப் போக

அடவல்ல ஆகையினால்

அன்னரதி ஒன் மனவி

அடியாள் உரைத்தச் சொல்லை

அதைத்தடுத்து விண்டுலகில்

அங்கசனே போனியென்றால்

உனக்கவடம ஞ்செய்து வைப்பார்

ஆண்டவனே, யிந்த மொழி

அறிவாய், நீ போனவுடன் உன்னாள்மையும்
அவ்விடத்தில் அணுவு நடவாது
அங்கசனே யென்றுரைத்தாள்
அன்னரதி தேவியரும். 23

## ரதி தற்க்கம்

மாமன் கோபாலன் பெத்த
மதிக்காத பச்சைக் கல்லே
மார்தளு நீலகல்லே
மார்பிலிடும் வயிரக் கல்லே
மயங்காதே தன் நினவு
மன்னவனே கேளுமெண்டு
மங்கை யுரைக்கலுற்றாள்
மற்கை போய்த் தாமரையில்
நாலுவேத முதல் மாமனுக்கு
மகாசிவன் யென் தகப்பன்
மனதிலுபதேசஞ் செய்தாராம் அதை
மனதிலே எண்ணிப் பாராமல்
மதியாமல்ப் பேசுவது
மணவாளா ஞாயமல்ல
மங்கை சொல்லைத் தட்டாதே
மடிப்பூக் கவடமாய்
மதராசனே உம்மையுந்தான்
மகாதேவர்கள் அழைத்தாரெண்டு

மத்துமுள்ள ரிஷிமார்கள்

மாச்சரியமாய் அழைத்தால்

மயங்கி அரைக்குள்ளாக

மாளிகையே விட்டேகி

மங்கையரொ யிங்கேவிட்டு

மறந்து மனம் கலங்கி

மங்கலமாய் போறமென்றால்

மனை முடித்தப் பத்தாவே

மங்கை தடுப்பதுண்டோ யென்னை

மறக்க மன வருமோ

மாமால் மய்யழகே

மயிடுமங் கண்ணழகே

மலர்க்காவிப் பல்லழகே

மாணிக்க முத்தழகே

மச்சத்துக் கண்ணழகே

மங்கையர்க்குப் பொட்டழகே

மலர்க்காவிப் பல்லழகே

மகாசித்திர ரூபழகே

மயிலாளப் பிறையழகே

மனதிலக் கவனம் சத்தே

மனதிலையுமந்தோணலையோ

மனது குசாலுடனே மணியே திரவியே

மறப்பு ரெண்டு நானறியேன்

மகாசிவன் யென் தகப்பன்

மடிப்பூசெய்த் தீவனைக்கி
மனம் வெறுக்க ஞாயமில்லை
மன்மதனே யெண்டு சொல்லி
மாத்துள்ள தங்கமே
மணிரெத்தின முத்துளிவேயென்று
மாயமகன் மன்மதருக்கு
வாறதை தடுத்துரைத்தாள்
மங்கை ரதி தேவியரும். 24

முற்ப்புரத்தை தானெரித்தார்
மூர்க்கன் தலையறுத்தார்
முள்றி மலர் சூரியனை
முல்பல்லை மூளி செயிதார்
மூன்று கயிலக்கி
மோடணமாயி தானொடித்தார்
முக்கண்ணன் வாசகத்தோன்
முன் தலையைக் கிள்ளிவிட்டார்
முன்பாதத்தால் நமனை
மூர்சைபடவே யுதைத்தார்
முன்னால் கனகசபைமோடி நடனமிட்டார்
மூர்த்தியெனும் யென் தகப்பன்
முக்கண்ணழகுள்ளவரே நீர்
மோடணமாய் பேசுவது
முறையல்லக் காண் யெனஞ்சாமி
மூர்க்கமுள்ள யெனங் கணவா. 25

வாமன வதாரம் எடுத்து
மாவுலியே பாதாளத்தில்
மாறாச் சிறையில் வைய்த்து
வனமாணா மைந்தனும் தானல்லவோ
வாள சுரறானேனும் (வாளசூறறுனேனும்)
வந்த சூரரை செய்த்த
மாதவனார் பெத்தெடுத்த
மதளையும் நானல்லவோ
மதி ராமனாக வந்து
வாளால் சிறகு திறத்த
வள்ளல் மகன் நானல்லவோ
மங்கையறுக் கற்ப்பு(பூ)தமே
மனது கிசைந்தவளே
மாணிக்கத்து வொளிவே
மங்கைது ரெத்தினமே
மயங்காதே யெண்டு ரைத்தார்
மங்கை ரதி தேவியர்க்கு
மன்மதருக்கு அண்ணளவில். 26

மச்ச வதாரமெடுத்து
மரனானங்கு முன் கொடுத்த
மாயமகன் நானல்லவோ
வல்லாமை யாயி பிறந்து
மகாமேரு யெழு கடலும்

மண்ணு முதகால் தாங்கும்

வரதன் மகனல்லவோ

வராக அபதாரமெடுத்து

மகில தலத்தை கொண்டு வந்த

வாலால் மாயமகன் நானல்லவோ

மடங்க நூறடிக்கம்பம் நின்றுவந்த யிரணியனே

மார்பைப் புளந்த வைய்குந்தன்

மகன் நானல்லவோ

மங்கையர் கற்ப்பிகர்

சேமயிலச் சாயல் பின்னளவி

மாது ரதி தேவியரே. 27

யீரேழு லோகம் யேரும் புகடையான் முதல்

யீசானியனருதி யெமனிறவியிந்து

யெண்டிசைக்கி பாலகரும் யேக

வெளி அகண்டம் யிப்புவி தராதார்

யேரையோர் முனி ரிஷிகள்

யெட்டு மானாகம்

யெழுவகை தோத்தமுடன்

நால்வகை யோனிகளும்

யெண்டிசையை சுமக்கும்

யிதமா மதகெளிரும்

யீசன் மலரயனும் யெச்சர் கின்னரர்
யேகாதெசி ருத்திராள்
யியம்பு அருசனமயம் யெல்லா
சிவாத்துமழு யெல்லா
பரபிரம யென்னுடையக்
யிக்கணையால் யின்ப சந்தோஷமுடன்
யிலங்கி மிகவாழுவதும் யெல்லாம்
அரிந்திருந்தும்
யேங்கிக் கலங்குவதென் யேந்திழையே
யிச்சனத்தில் யிந்திரசபை போயிவாரென்
யிருதயமங் கலங்காமல்
யிருந்திடும் யென் ரெத்தினமே
யீசன் திருமகளே
யினிதான சக்கரையே
யின்ப சுடர்மணியே (சூடாமணியே, சுடாமணியே)
யினக் கிசைந்த நாயகியே
யெண்டு மிகத்தானுரைத்தார்
யேகவர்ணன் நீன்றெடுத்த
யெளிழகன் மன்மதரும்
யின்பமுடன் அந்நேரம். 28

கற்ப்பகமே மெய்ப்பொருளேக்
கருணைக் கடலமுதே
கடவுள் மருமகனே

கார்வண்ணன் நீன்றெடுத்த

கண்ணே மணிவிளக்கே

காசினியர் காசமுள்ளோர்

கற்ப்பினை சொல்கூடா (சோலைகூடா)

கடவுள் பதிக்கி மேலாய

கனம் பெரும் ஆரோக்கியாபுரம்

கட்டிளை செலுத்துகின்ற

கந்தர் கிருபாகரனே யென்

கண்ணுக்கு கண்மணியே

காதல்(த்) திரவியமே

கலியாண சிங்காரா

கலைகள் புராணமெல்லாம்

கத்தறிந்த காவலனே

கன்னியர்கள் ரம்பையர்கள்

கனகமணி கும்பகத்தில்

கணையடித்து மோகமிடும்

கற்பூர வாசகமே

கந்த பரிமளங்கள்

கலந்தனையு மெய்யோனே

காந்தமதி வதன

கார்வண்ணன் புத்திரனே

கட்டிக் கரும்பு அமுதே

கர்மக் களஞ்சியமே

கருத்துகந்த ரெத்தினமே

கங்கணு கட்டியென்னை
கயிபிடித்த கண்ணாளா
காரீய நீர் சொல்வதெல்லா
கபடில்லை உள்ளது தான்
காரிகையாள் நான் பாவி
கட்டழகா உம்மைவிட்டு
கணம் போதிருந்தாக்கால்
கலைபிரிந்த மான்போலும்
கண்ணிழந்த ஆவினம் போல்
கடுவன் தனைப் பிரிந்த
கானகத்து அண்டிலைப் போலக்
கனவு கண்ட ஊமையைப் போல்
கயவாவி விட்ட
கானமயிலன்னம் போல்
கலங்கி பரிதவிக்கும்
காரிய மெல்லாந் தங்கள்
கருத்திலத் தெரித்திருந்தும்
கற்பக நாடுதனில்
காதலி போயி வாரேனெண்டு
கரு(த்)தாக சொல்வதென்னா
காரணந்தான் சொல்லுமெண்டு
கன்னி ரதிதேவி
கனமாய் உரைக்கலுத்தாள்
கட்டழகன் மன்மதர்க்கு. 29

## சிவமயம்

தேசம் அன்பத்தா ருதிக்கேட்டு

திசைனாங்கு மத்திரிகோண்

சத்தகிரி தீவு தீவாந்திறம்

திருகோண அண்டபிண்டம்

செகதனவின் பாதாளம் அதில்

சேந்திருக்கும் திருவேலை கண்ட மசினமய

அண்டகோலங்களில் சேந்திருக்கும்

சீவசெந்து தேவர் முதல் முனிவோர்

சித்திவித்து யாதருடன் தீர்க்கமுள்ள

சத்திரிஷி தேவர்களுக்கரசன்

திங்கள் தினகரனுஞ்செய்ய

மலரோன் கடவுள்

திசையெட்டு பாலகரும்

சிம்ம முதல் மிருகம்

சிறகு பறவை சேடன்

திசைகளிற்சேற் குள்ள

ஆத்து மாக்காளதீறென்–றெண்

சூர்ன செகதலத்து மானிட்டங்கள்

திவ்விய தோத்த மேழு செப்பியி

நால்யோனி சகல சீவசந்து களெல்லாம்

செய்யியே யென்னுடைய

திருக்கை மலர்க்கணையால்

செழித்து சுகித்து
செற்ப்பாக (சிறப்பாக) வாழ்ந்திருக்கும்
அஞ்சேதியளை தானறிந்து
தெரியாதவள் போலே தேவிரதியே
யுனது சித்தமங் கலங்குவ தென்செய்ய
முகம் வாடுவதேன் சிவசங்கரன் மகளே
சிவபாதமான பெண்ணே
செம்பொற் சிலையுருவே
சிரோமணியே ரெத்தினமேயென்
தேவிரதியாளே தெயங்காதே யெண்டு
உரைத்தார் தெய்வீக மன்மதரும்.

தத்துவ வித்தகமே
தனுர்வே உத்தமனே
சந்திமதி யாகி
சாம்பிராச்சிய நீ பூணா
தண்மை நயகுணமே
சரசலீலை பொருளே
சரசன் விஷசனமே
சாந்தமிகும் ரஞ்சிதமே
தத்தை பரிபொனே
தனரேகை கய்யோனே
தக்கோர்க்கு மிக்கவனே
தனக்கு நானே நிகராயித்

தானுப் பச்சை ரூபொனே
தாரா நடை ஒயிலே
சகலை கலை வல்லவனே
சக்கு ராயு தச்சுதனே
தரணியெல்லாம் ஆளும்
தகத்துக் குடையோனே
சசிக்குடைய ருள்ளோனே
தயாள பொருளுத்தமனே
தட்டாண்மை யுள்ளோனே
தாங்கள் சொன்ன வரத்தை யெல்லாம்
சரித்திரங் காணாண்டவனே
சண்ம போதுமைப் பிரிந்து
தனித்துப் படுந்துயர்
தணலில் மெழுகது போல
தாயில்லா பிள்ளைகள் போல
தண்ணீரில்லா பயிர்போல
தாமரையில் நீர்போலுந்
தளம்பி பரிதவித்து
தவுதாய் பட்டுழலுந்
தண்மை யெல்லா மறிந்து
தானவர் சபை போரேனென்று
சலுதாக சொல்லுவது
தர்மமல்லவென்றுரைத்தாள்
சதாசிவனாதன் மகளும். 31

## புலம்பல்

ஆசார லோலன்
அரசுக்கரசு பதி
அன்னநந்த ஒயிலன்
அஷ்ட்ட திசை கீர்த்திப் பெத்தோன்
அரை நூல்மறை அறிந்தோன்
அய்ந்து கண்ணையுடையோன்
ஆராய்ந்த தெள்ளமுர்தோன்
அணங்க ராசேந்திரனார் அழகும்
அறிவுகளும் அன்பும் சபெலமும்
அடிசகியே யெந்தனுட
ஆவி நினைந்து நொந்து
அக்கினிப் போல பத்துதடி
ஆச்சியரேயென்று சொல்லியடித்துப் பிரண்டழுதாள்
அன்னரதி தேவியரும். 32

ஒண்ணலரை வெண்ணதுரை
ஒளிவுயர்ந்த பச்சை வண்ணன்
ஒதறிய கீர்த்திப் பெத்தோன்
ஒதக் கடல் முரசோன்
ஒலைப் பூவாள் படைத்தோன்
உலகத்தோர் யாவரையும்
ஒழுங்கணைத் தொடுப்போன்

உலகளந்த ரீண்டகுதன்

உத்தம நாதன் மதனை

உத்து நினைந்தென்னாவி

ஒலையில மெழுகதுபோல உருகுதடி

ஒசகியே யெண்டு

ஒங்கு பிரண்டழுதாள்

உத்தமியாள் அண்ணவில். 33

சந்தனச் சோலையை விட்டு

சம்பிரகுட மஞ்சனவிட்டு

விந்தை ரதியை விட்டு

வீரியமாய் போன

விமல மதராசனுக்கு யென்னா

விபத்து வந்து நேந்துதடி

மெல்லியரே தாதிகளா. 34

* * * * *

## ஒப்பாரி

சீவி முடித்த கொண்டை

சிக்கு படக் குலைந்து

செவ்வா யிதள் போலே

செங்கரும்பை வில்வளைத்து

சிறு(ரு) ணாணி(னு) தந்தியிட்டு

மங்கையரே ---- பொறப் பாவாணம் (புரியவில்லை)

சிவன் மாரில் அடித்தவர்க்கு

நீ மயங்கி அழுவானென்
மங்கை ரதி பெண்ணரசே 1

கொன்றல் முகில் வண்ணன்
கோபாலன் தன் மகனே
அண்டமுனி தேவரன்றே
அருக்கையாய் பொன்
அழகுள்ள மன்மதரும்
ஆதிசிவனார் நெற்றிக் கண்ணாலே
நிமலகண்ட யீசுபரனார்
பத்தி யெரித்தாரோ
பங்கொடியே தாதிகளா. 2

வரிசைத்துரை மகனே
மயிலெழும்பும் மன்மதனே உன்
அரும்புத் திருமேனியெங்கும்
ஆணிப்பொன் ரேகமய்யா
காலுமஞ் செந்தாமரைப்போல
கையும் செந்தாமரைப் போல
ஆடுன பாம்பை அடித்தார்கள்
தேவர்கள் சாரங்கபாணி அய்யன்
சாச்ச திருமுடியே. 3

அவி மன்ன ராசாவே
அறுத்து(ரு) பலி(ளி) மூன்றார்கள்

மாயமகள் சுந்திரியே
வனத்துத் தாலி வாங்குனார்கள்
அவரண்ணா பளி (லி) கொண்டார்கள்
நீயிங்கே பளி (லி) கொண்ணீர்களோ
மாயாபுரி நகரில்
மதனும் ரதியும் போல
வாள்ந்து ண்டிருப்பமெண்டு
மனமகிள்ச்சியாய் இருந்தேன்
மன(ண)க்கோலம் வந்துதடி
வண்ணமணித் தாதிகளா. 4

சத்த சாகரம் பொங்கி
சகல புவனங்கள் யெல்லாம்
யி(யீ)ருள் மூடிப்போனாலும்
சந்திரரும் சூரியரும்
தான் மறைந்து போனாலும்
வத்தாத பார்(ற்)க் கடலில்
வாளுகின்ற ஒன் மாமன்
வயிகுந்த ருள்ள மட்டும்
ஒணக்கு துணையான மதன்
யிந்திர சபை போன பின்பு
தேவர்கள் கண்டு
தெரிசினங்கள் கண்டு
தீயிலெரிந்தது போல
காணுதடி சீவரெத்தினத் தாதிகளா. 5

அண்ட கோலா கோலத்துக்குள்ளாக
ஆயிரத் தெட்டண்டம்
அறனூ த்திருவத்தினாலு புவனம்
அனந்த கிளை புரமும்
அன்பான தத்துவமும்
ஆதிவிந்த னாதமுடன்
அழகு சந்திரரு சூரியரும்
அண்ட சராசரத்தை
அடங்கலுமே தான் படைத்தார்
ஆதிபராசக்தி அன்னல் நிழல் சாயல்
அழகு நடை உடையாள்
அழகி அன்னரதி தேவியரே. 6

அங்கமுத்தே தங்கமுத்தே
அரிய மதன முத்தே
சிங்கார வல்லி முத்தே
சிரோமணியே நீர்கேளும்
மாலைக் கொளுந்தே
மானந் துளிரே செண்பகமே
வாடைப் பொடி (போட்டி) நடத்தும்
வெங்கிடனார் கண்மணியே
ஆசைமயல் கொண்ட பெணங்கள்
ஆறளை த்துப் போனாரோ
ஆள்மை யுள்ள மன்மதரே. 7

வர்ண்ண(வறனன்) மணிபூட்டி
வஞ்ச மலர் கயிலிட்டு
சோரன்ன கிளியாளே
தோகை மயரே
சொல்லுரே னங்கேள்
மானதுடந்த மானது போல
மயிலாளே யிங்கே விட்டு
காலொடிந்த மானது போல
கலங்கித் தவிக்கிறேனே
கட்டளகா யெனங் கணவா. 8

அயிவரளி கய்யாலே
அமந்த சிவன் மேலே
அய்ந்து கணைத் தொடுக்க
ஆளழகன் போனாரே
ஆதிசிவன் யென் தகப்பன்
அனலாய் எரித்தாரோ
ஆச்சியரே யென்ன செய்வேன் யெண்டு
அடிச்சு பிரண்டமுதாள்
அன்னரதி தேவியரும். 9

உச்சிதஞ்சேர் ஆளிபொங்கி
உலகமெழுந் தாலிலே மேல்
ஓடி மகாவிஷ்ட்டுனு

உறங்கி யிருந்தாலும்

ஒன் மாமி லெட்சுமி பெத்தெடுத்த

நிர்(ற்) மதராசனுக்கு

அச்சம் வருவதில்லை

அளகு ரதி மயிலே. ௰

அணுவு மலையாகி

அஷ்ட்ட கேசம் தோள்

மாத்திக் கொண்டாலும்

அண்ட பிண்ட சராசரங்கள்

அசைந்து விழுந்து

அனவர்வோர் மடிந்தாலும்

ஆளழகன் மன்மதருக்கு

அமரு வருவதில்லை

ஆரணங்கே யெண்டு சொல்லி

அன்ன ரதியாளுக்கு

ஆதரவு சொல்லலுற்றாள்

அருமையுள்ள தாதியர்கள். 11

காட சாலை மானே

கானகத்து பெண் மானே

காடு கறுத்து கான

கந்தனில் விட்டு

கண்ணி கட்டும் பாவினைப்போல தேவர்கள்

ஆசைவலைக் குள்ளகப்பட்டுக் கொண்டு
அரன்மேல் கணைத் தொடுத்து
அனல் பத்தி வெந்தாரோ
ஆண்மையுள்ள மன்மதருமேயெண்டு
அடிச்சு பிரண்டழுதாள்
அன்ன ரதி தேவியரும். 12

சந்தனச் சோலையிலே
சப்பிற் கூட ஊஞ்சலின்மேல்
விந்தையுட னங்கூடி
விளையாடி மெத்தையின் மேல்
அந்தரங்க மந்தன்னில்
அமந்திருந்த மன்மதனும்
அழகான தூதர் வந்து
அழைத்துக் கொண்டு போனவுடன்
ஆதிசிவன் மேலே அருங்கணைகள் தொட்டாரோ
ஆச்சியரே தாதிகளா. 13

அஞ்சு சிரசுள்ள ஆதிசிவனம் பேரில்
ஆளழகன் மன்மதரும்
ஆகாத தேவர்கள் சொல்கேட்டு
அருங்கணைகள் தான் தொடுக்க
அப்போ ஆதிசிவனாரும்
(அரும்)அம்பால் அடித்தவர்க்கு

அக்கினி போல தானெரிக்க

அலரி விள(மு) கண்டநெடி

ஆண்மையுள்ள தாதிகளா. 14

## தற்க்கம்

மந்தாரைப் பூக்கும்

மகிள மகிளம் பூச்சோலையிலே

செந்தாழைப் பூக்கும்

சிறந்த முளஞ்சோலையிலே

செங்கண் மடவனோ

சீர்பெருகும் வானுவனோ

முனிவர் கழுக்(களுக்) தாசைபலன் (களுக்காசை)

முயற்க்கு மகராசன்

தேவர்களுக் காசைபலன்

தீர்க்கும் மகராசன்

திக்கு விசையம் செலுத்து மகராசன்

ஆசையெல்லாம் கூடி

யமந்திருக்கும் மண்டபத்தில்

செறப்(சிறப்) பெல்லாங் கூடி

செறந்(சிறந்) திருக்கும் மண்டபத்தில்

செறப்(சிறப்)பாயி அலங்கரித்து

கோமேதகத்தாலே குத்துக்காலத் தானிருத்தி

மாணிக்கத் தூணிருத்தி

வயிர வளை(ல) பரப்பி

வச்சிரத் தாலே கத்தைக் கொண்டு
மேஞ்(மெ)ச வசந்த மணிமண்டபத்தில்
வாகா யலங்கரித்து
வாணித்தவாணி விரித்துக்கட்டி
மகரத்தேரு தோரணங்கள்
வரிசைப் பிரனாட்டி
தூணுக்குத் தூணு
தூண்டா மணிவிளக்கு
துலங்கி யொளி காட்ட
கருங்குயில்கள் ளெல்லாம்
காமப் பவுனி(வ) சொல்ல
கருத்தை யுருத்தரியார்
கன்னியர் கல்லால் பரிக்கும்
ரோகிணி வீட்டுக்கு சந்திரன்
னோக்கி நடப்பது போல
யிந்திராணி பக்கம்
தேவேந்திரன் நடப்பது போல
தெய்வானை வீட்டுக்கு
செவ்வேள் நடப்பது போல
மாது அரண்மனைக்கி வந்தார்
காண் மன்மதரும். 15

அந்தப்புரத்தில்
ஆளழகன் சேந்து யென்னைப்

பல காலம் லீலை செய்து
படுத்திருக்கும் பத்தாவே
பழுது சொல்லுமந் தூதுவர்கள்
பாங்குள்ள னாருதரும் (நாரதரும்)
கொண்டளைத் தகன்றநடி னகால்
முலி..... (கோல) தாதிகளா. 16

யென்னை அஞ்சுகம் போல வளத்த
அருமையுள்ள தாதிகளா
ஆயன்மகன் மன்மதனார்
அண்டத்திலப் போனபின்பு
ஆகாத சொர்ப்பனங்கள்
அருங்கிளியாள் கண்டநடி
அல்லி முத்தே தாதிகளா. 17

கஞ்ச மலர்வாணி தன்னில்
கனமான பொஷ்ப்ப(புஷ்ப்ப)மெல்லாம்
கரிகள் போலச் சுருள
கண்டநடி தாதிகளா. 18

ஆதித்தனே போல் விளங்கும்
அளகாபுரியில்
அனல்பத்தி வேகுதென்று
அந்தணர்கள் யெல்லாரும்
அண்டத்தி லில்லாமல்

அலைகுலைந்து நிக்கவும் நான்(னான்)
ஆரணங்கு(ற) கண்டநடி
அருங்கிளியே தாதிகளா. 19

வையிகுண்டம் தன்னில்
மர யமகன் கட்டி வைய்த்த
மாளிகை தன்னில்
வல்லிடிகள் தான் விழுக
மங்கை ரதி கண்டநடி
மங்கையரே தாதிகளா. 20

ஆரோக்கியா புரத்தில்
அமந்த பிரம்மாலையங்கள்
அனல் பத்தி வேகுதென்று
அந்தணர்கள் யெல்லோரும்
அய்யோ சிவனேயென்று
அழுதுவர கண்டநடியென்
அங்கமுள்ள தாதிகளா. 21

கோலமுள்ள நீலமதன்
கொண்டு சண்டை செய்யயிலே
நீல முளி கணங்கள் யெல்லாம்
நெருப்பெரிய கண்டநடி
நேரிளையே தாதிகளா. 22

அவர் அச்சுத மலரெடுத்து
ஆன பரமேஷ்பரன் மேல்
காதுமட்டும் வில்வாங்கி
நாணி யிளுக்கையிலே
கையி வில்லு சோறாவிட்டு(ற)
கண்பொரியில் தான் கிளம்பி
கதரி விளக் கண்டநடி
காம ரெத்தின தாதிகளா. 23

தெள் ளமுர்தம் பூட்டி
தேசத்து பச்சை யெல்லாம்
திறமாகத்தான் பேசும்
கிள்ளைகளும் அச்சாணியில்
கிளம்பி விளக் கண்டநடி
கிளி மொளியே தாதிகளா. 24

வனத்துல பசு மேய்ந்து
வகை தப்பி ஒடிவந்துக்
கிணத்திலத் தவரி விள கண்டநடி
கிளிமொளியே தாதிகளா. 25

காவு தன்னை மேய்ந்த
கவலைப் பசுவு தன்னைக்
கடுவிசங்கள் தீன்ற
கட்டழகி கண்டநடி. 26

உத்ததொரு வட்டமலை
உருண்டு விளுந்தாப் போல
சித்திர ராச மன்மதனார் முடி
சிதறி விளக் கண்டநடி
தேன் மொளியே தாதிகளா. 27

கோவிரெட்டின கிரிமலையை
கொடையாய்ப் பிடித்திருக்கு
கோவிந்தன் தன் மகனும்
கொலுவிருக்கும் கோபுரத்தில்
கோடையிடி விழுந்து
ஆபத்து வந்து தென்று
அதிலிருக்கும் கொம்மை(பொம்)யெல்லாம்
அய்யோ சிவனையென்று
அழுதுவர கண்டநடி யென்
அங்கமுள்ள தாதிகளா. 28

அலங்கார மேடையின் மேல்
அம்பொற்மணி ஊஞ்சலின் மேல்
ஆயன் மகன் மன்மதருக்கு
அழுசனை பஞ்சனையில்
அயிந்து மலர்ப் பரப்பி
ஆளழகன் சேந்திருக்க

அருங்கிளியாள் கண்டநடி
ஆள்மையுள்ள தாதிகளா. 29

துண்ணுவனோ வேடுவனோ
துப்பாக்கி தானெடுத்து
சூடகத்து அம்பதுபோல
துடித்துப் பிரண்டு
சுளண்டுவிள கண்டநடி
தோகையரே தாதிகளா. 30

அந்த அதிசயத்தே
அறிந்துவர வேணுமெண்டு
அழுதாள் ரதிதேவி
அப்போ அழுகாதே யெண்டு
தாதிமார் பெணங்கள் (பெண்கள்) யெல்லாம்
ஆதரவு சொன்னார்கள்
அன்னரதி தேவியர்க்கு. 31

காசினிக்குள் வாழும்
கணத்துள்ள சீவசெந்து
கனக முடி பிரமாவும்
கற்ப்பித்து போடயிலே
கலக்கமந் துணிவும்
கண்முளிப்பு நித்திரையும்
காய்ப்பிறப் பிறப்பு

கடந்தவர்கள் தள்ளுவரோ
கற்ப்பரசே யெங்களுட
காமரதி தேவியரே. 32

அந்த விதிராசன் செயித
விபரமந் தெரியாமல்
மெலிந்து தவிக்க வந்த
விபரமென்னா வென்று
விசாரிக்கப் போவமடி
விசாலாட்சி வாங்களடி
அந்த மதிராசன் செயித
மகிமை யறியாமல்
மயக்கித் தவிக்க வந்த
மகிமை யென்னா பெண்ணரசே. 33

நாசி நடுநுணியில்
நாலாறு அங்குலத்தில் – அந்த
நடனம் புரியுகிண்ட
நாதனஞ் செயல் யெப்படியோ
நாமரியோம் பெண்ணரசே. 34

அந்த மொழி கேட்டு
ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லாவே தாதிகளா
அன்பாக சொல்லுறேனங்கேள்

யின்னைக்கி யேற்ப்பனடி யென்னுயிரே
யேந்திழையே தாதிகளா. 35

பத்தாவே தோத்து(தொ)
பது விலயிருப்பதில்லை
மன்னவனே தோத்து
மண்ணில் யிருப்பதில்லை
மங்கையரே தாதிகளா. 36

மடிப்பனடி யென்னுயிரை
மயிலியடி மோகனமே யெண்டு
மயங்கி அழுகலுற்றாள்
மங்கை ரதி தேவியரும். 37

காமவல்லி நேமவல்லி
காதவல்லி கோதைவல்லி
வாமவல்லி ரூபவல்லி
வச்சிரவல்லி பச்சைவல்லியென
சோமவளமே சுந்தரப்பெண்
சுந்திரமே
அல்லி முத்தே சாயல்முத்தே
அம்ம முத்தே பொம்மி முத்தே
அருமையுள்ள மன்மதருக்கு யென்னா
அபஷ்த்தை வந்து நேந்துதடி
ஆரணங்கு தாதிகளா. 38

## சிவமயம்

நீங்கள் சேரப் பிறப்பிடுங்கள்

ஆரியடி வீரியடி

ஆபரண சிங்கியடி

மோதிர கையளகி

முருகாய செங்கமலம்

நீங்கள் சேரப் பிறப்படுங்கள் யென்

ஆச்சிமார் பெண்களாயென்

திருக்களுத்து நூல்வாங்க. 39

செல்வி சிவகாமி

சீருள்ள மீனாட்சி

அல்லி முத்தே செண்பகமே

அபிராமி பச்சை முத்தே

மோகன பெண்ணாளே

ஆச்சி கருப்பாயி அமுர்தவல்லி

அகிலாண்டம் மச்ச கமலாச்சி

மருதாயி செங்கமலம்

யிச்சையுள்ள தாதிகளா

யென்னருகே வாங்களடி

அடி அன்ன நடச்சியரே

அரசாயி நாக கன்னி

கன்னியளகி காத்தாயி செங்கமலம்

பொன்னி அலமேலும்

பொம்மி சிங்கி ராமாயி
யென்னருகே வாங்களடி
மங்கியடி பொங்கியடி
வடிவுள்ள சிங்கியடி
கூந்தலளகியடி குஞ்சாயி
தஞ்சாயி பொங்குதடியென்
திரேகம் பொருக்க
முடி கூடுதில்லையென்
சோட்டுப் பெண்டுகளா
யிசைஞ்சாடு வன்(ண்டு)றுகளா
யிம்பவளைத் துண்டுகளா
யிளவாழைத் தண்டுகளா
செம்பகப்பூச் செண்டுகளா யெண்டு
தேமி அழுகலுற்றாள்
தேமொழியாள் பெண் ரதியும். 40

தேவர் சபை போயி
தெரிசித்து வாரேனென்ற
சித்தசவேள் மன்மதரும்
தீபத்தில் வெந்தாரோ
தேமொழியே தாதிகளா. 41

ஆயிரமங் கண்ணுடைய
ஆதி சிவனம் பேரில்

அழகுள்ள மன்மதரும்
அருமங் கணைகளெயி தாரோ
ஆதி சிவன் யென் தகப்பன்
அனலாய் யெரித்தாரோ
ஆச்சியரே தாதிகளா. 42

பரமசிவன் யென் தகப்பன்
பார்த்த வசிருக்கு
பார்க்க முடிபோகாமல்
பச்சமுள்ள தேவரெல்லாம்
பார்த்தீபன் மன்மதர்க்கு
பரிவாகத் தூதுவிட்டு
பாங்காய் அழைத்தாரே
பங்கிளியை தாதிகளா. 43

தெயிவ லோகம் ஆளும்
தேவர்களும் அப்போது
திறமுள்ள தூதரவிட்டுத்
தீர்க்கமுள்ள மன்மதனைச்
சீராயழைத்து தெயிவ சபைபோயி
சிவன்மேல் கணைத் தொடுக்க
சேதிகள் சொன்னாரோ
அவர் சேதிகளைக் கேட்டு
திருக்கணைகள் தான் தொடுக்க

சிவனுடைய கண்ணாலே
தீயா யெரித்தாரோத்
தேமொழியே தாதிகளா. 44

அப்போதும் தாதியரும்
அன்பாக யேது சொல்வாள்
அன்ன பசுங்கிளியே
அமுர்த குணவாசகமே
ஆச்சியரே சொல்லுறேனங்கேள்
அழகுள்ள மன்மதருக்கு
அமரு(டு) வரப் போறதில்லை
அழுகாதே யெண்டு
ஆதரவு சொல்லலுற்றாள்
அங்கமுள்ள தாதியரா. 45

நீங்கள் யென்னதான்
சொன்னாலும் யேற்பனடி
யென்னுயிரே மன்னவனெவிட்டு
மண்ணி லிருப்பதில்லை
ஆண்டவனே விட்டு
அடியாளிருப்பதில்லை
யின்னுவர்க் காணுமெண்டு
யேங்கி யழுகலுற்றாள்
யேந்திழையாள் பெண் ரதியாள். 46

பார்பதியாள் பெத்தெடுத்த
பச்சமுள்ள பெண்ரதியும்
பரதேசியள் போலே
பாங்காய் கலங்கி
படுப்பாள் யெழுந்திரிப்பாள்
பாராட்ட தாதிகளா
பச்சை பசுங்கிளியே
பாரோடியோ வென்று சொல்வாள்
பாக்காத போனாக்கால்
பாவிகளா யெண்டு சொல்வாள்
பயித்தியம் கொண்டவள் போல
பாங்கா யலங்கரித்தாள்
பச்சமுள்ள பெண் ரதியும். 47

* * * * *

# துணை நூற்பட்டியல்


1. அண்ணாமலை. வே., (தொகுப்பாசிரியர்), மெய்யப்பன். ச., (பதிப்பாசிரியர்), சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் – 607 001, 2000.

2. அவினாசிலிங்கம், கலைக்களஞ்சியம், தொகுதி – 3, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை – 5, 1956.

3. இராசகோபாலன், கோ.வி., காமன் கதைப்பாடல் ஓர் ஆய்வு, மாருதி பதிப்பகம், 173, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14, 1985.

4. இராமசாமிப் புலவர், மதனவித்தாரமாலை, கழக வெளியீடு, சென்னை – 1, 1963.

5. பொன். சண்முகம், தமிழில் காமன்பாடல்கள் (மதுராந்தகம் வட்டம்), எம்.ஏ. ஆய்வேடு, தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை – 59, ஏப்ரல், 1997.

6. சாமிநாதய்யர், உ.வே., (பதிப்பாசிரியர்), சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ஸ்ரீ தியாகராச வெளியீடு, பதிப்பு – 8, சென்னை, 1968.

7. சாமிநாதய்யர். உவே., (பதிப்பாசிரியர்), மணிமேகலை, ஸ்ரீ தியாகராச வெளியீடு, ஆறாம் பதிப்பு, சென்னை, 1965.

8. சாமிநாதய்யர். உவே., (பதிப்பாசிரியர்), சீவக சிந்தாமணி, உ.வே.சா. ஆராய்ச்சி உரை, ஸ்ரீ தியாகராச வெளியீடு, சென்னை, 1967.

9. சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, AES வெளியீடு, புதுடெல்லி, 2001

10. தமிழண்ணல், தமிழில் தொன்மச் செல்வாக்கு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 17, 1986.

11. தங்கமுத்துப் பிள்ளை, நவரச ஒப்பாரி,

வி.ஏ. தியாகராஜ செட்டியார், எரிந்த கட்சிலாவணி,

வி.எஸ். பாப்புதாசர், எரியாத கட்சிலாவணி, சண்முகானந்தா புக் டிப்போ, 67, டி.கே. முதலி தெரு, சூளை, சென்னை – 112.

12. பரமசிவம், த.கோ. முனைவர், சுவடிப் பதிப்பு நெறிமுறைகள், பதிப்பாசிரியர் , தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, 1989.

13. பாலுசாமி, நா., (முதல் பதிப்பாசிரியர்), வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.

14. பெரியண்ணன். கோ., கிராமியப் பாடல்கள், விசாலாட்சி பதிப்பகம், சென்னை, 1982

15. ஜெபக்கனி செல்வராஜ், மன்மதன் ஓர் ஆய்வு, மரியம் வெளியீடு, கோவை, 1992.

16. கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை – 1, 1969.

.17. நூதன பெரிய பலபேர் பாடிய ஒப்பாரி, இரத்தின நாயகர் அண்டு சன்ஸ் பதிப்பு, 26, வெங்கட்ராம தெரு, கொண்டித்தோப்பு, சென்னை – 79, 1996.

**தமிழ்ச்சுவடி அட்டவணைகள்**


1. தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை, தொகுதி 1,2,3,4,5, பதிப்பாசிரியர், முனைவர் த.கோ. பரமசிவம், தொகுப்பாசிரியர், முனைவர் வே.இரா. மாதவன், புலவர் வ.வெ. நாகராசன், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1989.

2. கேரளப் பல்கலைக்கழகம், தமிழ்ச்சுவடிகள் அட்டவணை, தொகுதி–1, இரா. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983.

3. தமிழ்ச்சுவடிகள் அகரவரிசை அட்டவணை, தொகுதி–1, பண்டிட் உலகநாதப்பிள்ளை, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை,1925.

4. தமிழ்ச்சுவடிகள் அகரவரிசை அட்டவணை, தொகுதி–2, டி. சந்திரசேகரன், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1951.

5. தமிழ்ச்சுவடிகள் அகரவரிசை அட்டவணை, தொகுதி–4, ஆர். பாஸ்கரன், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, 1980.

# பின்னிணைப்பு–1

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் (மன்மதன் குறித்த சுவடித்தரவுகள்)

1. சுவடி : மன்மதன் சரித்திரம்

நூல் குறியீட்டு எண்: R5169, 6515,6517

ஓலைச்சுவடி இல்லை.

2. சுவடி : மன்மதன் கதை

நூல் குறியீட்டு எண்: R9034, 9168, T.R 3374

ஓலைச்சுவடி முழுமை. சுவடி சேதம் அடைந்துள்ளது.

3. சுவடி : மன்மதன் ஒப்பாரி

நூல் குறியீட்டு எண்: R5328, 5959, TR2400

ஓலைச்சுவடி நான்கு சுவடிக் கட்டுகள் கொண்டுள்ளது. முழுமை என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை.

4. சுவடி : மன்மதன் அலங்காரம்

நூல் குறியீட்டு எண்: R4311, 7452

ஓலைச்சுவடி முழுமை, தாள்சுவடியிலும் உள்ளது. பதிப்பிக்கப்பட்டுள்ளது.

5. சுவடி : மன்மத நாடகம்

நூல் குறியீட்டு எண்: D498, R 3016, R4669

ஓலைச்சுவடி முழுமை. சுவடி சேதமடைந்துள்ளது.

6. சுவடி : மதனகிரிராஜன் கதை

நூல் குறியீட்டு எண்: D456

ஓலைச்சுவடி சேதமடைந்துள்ளது.

**தாள் சுவடிகள்**

1. தாள் சுவடி : மன்மதன் அலங்காரம்

நூல் குறியீட்டு எண்: T. 5264

முழுமையாக உள்ளது. பதிப்பிக்கப்பட்டுள்ளது.

2. தாள் சுவடி : மன்மதன் காதலி அல்லது மருமகள் அனாமதேயம் நூல்குறியீட்டு எண்: T. 2588,

முழுமையாக உள்ளது. குறைந்த அளவில் சேதம் அடைந்துள்ளது.

3. தாள் சுவடி – மன்மதன் சரித்திரம்

நூல் குறியீட்டு எண்: TR 1245(R6517)

முழுமையாக உள்ளது.

**தமிழ்ப் பல்கலைக்கழக சுவடி அட்டவணை**

1. சுவடி: மன்மதன் கதை

நூல் குறியீட்டு தொடர் எண்: அ–91, 1799,

பொருட்பகுப்பு எண்: ஆ.ர –4, ர–23.

ஓலைச்சுவடியின் நிலை : குறையுடையது

2. சுவடி : காமன் பாடல்கள்

நூல் குறியீட்டு தொடர் எண்: 1927,

பொருட்பகுப்பு எண்: ர– 91

ஆசிரியர்: கதிர்வேல் கவிஞர்.

ஓலைச்சுவடியின் நிலை : குறையுடையது.

3. சுவடி: இரதி மன்மதன் ஒப்பாரிக்கண்ணி

நூல் குறியீட்டு தொடர் எண்: 1928,

பொருட்பகுப்பு எண்: ர– 92.

ஓலைச்சுவடியின் நிலை : குறையுடையது.

(உ.வே.சா. நூலகத் தமிழ்ச்சுவடி அட்டவணையிலும் திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழக தமிழ்ச்சுவடி அட்டவணையிலும் மன்மதன் குறித்த தரவுகள் காணப்படவில்லை).

# பின்னிணைப்பு–2

## பெயர்ச்சொல் அகராதி

(ஒப்பாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளவை இரதி புலம்பல் பாடல் எண்களைக் குறிக்கும்)


| வ.எ. | பெயர் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | அகிலாண்டம் | ஒப்பாரி –40 |
| 2. | அங்கசவேள் | 17 |
| 3. | அங்கனே | 17,18 |
| 4. | அங்கமுத்தே | ஒப்பாரி–7 |
| 5. | அச்சுதமால் | 17 |
| 6. | அடிசகியே | 32 |
| 7. | அண்டமுனிதேவர் | ஒப்பாரி–2 |
| 8. | அணங்கராசேந்திரனார் | 32 |
| 9. | அந்தணர்கள் | ஒப்பாரி–19 |
| 10. | அம்மமுத்தே | ஒப்பாரி–38 |
| 11. | அம்பரன் | 23 |
| 12. | அபிராமிபச்சைமுத்தே | ஒப்பாரி–40 |
| 13. | அமுர்த குணவாசகமே | ஒப்பாரி–45 |
| 14. | அமுர்தவல்லி | ஒப்பாரி–40 |
| 15. | அரசாயி | ஒப்பாரி–40 |
| 16. | அல்லி இதழ் | 17 |
| 17. | அல்லி முத்தே | ஒப்பாரி–38 |
| 18. | அல்லிமுத்தே | ஒப்பாரி–40 |
| 19. | அவிமன்னராசாவே | ஒப்பாரி–4 |
| 20. | அழகான தூதர் | ஒப்பாரி–13 |
| 21. | அளகாபுரி | ஒப்பாரி–19 |
| 22. | அன்ன நடச்சியரே | ஒப்பாரி–40 |
| 23. | அன்னபசுங்கிளியே | ஒப்பாரி–45 |
| 24. | அன்னரதி | 3, 23 |
| 25. | அன்னரதியாள் | 12 |
| 26. | அஷ்ட்டலெட்சுமி | 17 |
| 27. | ஆச்சிமார்பெண்களா | ஒப்பாரி–39 |
| 28. | ஆச்சியர் | 3 |
| 29. | ஆச்சி கருப்பாயி | ஒப்பாரி–40 |
| 30. | ஆச்சியரே | 32 |
| 31. | ஆச்சியரே | ஒப்பாரி–9 |
| 32. | ஆசாரலோலன் | 32 |
| 33. | ஆண்டவனே | 8, 23 |
| 34. | ஆதிச்சனை | 17 |
| 35. | ஆதிசிவனார் | ஒப்பாரி–2 |
| 36. | ஆதிசிவன் | ஒப்பாரி–9 |
| 37. | ஆதிசிவன் | ஒப்பாரி–13 |
| 38. | ஆதிசிவனம் பேரில் | ஒப்பாரி–42 |
| 39. | ஆதிபராசக்தி | ஒப்பாரி–5 |
| 40. | ஆதித்தனே | ஒப்பாரி–19 |
| 41. | ஆபரணசிங்கியடி | ஒப்பாரி–39 |
| 42. | ஆயன்மகன் | ஒப்பாரி–29 |
| 43. | ஆயன்மகன் | ஒப்பாரி–17 |
| 44. | ஆயன்மகனார் | 8 |
| 45. | ஆரியடி | ஒப்பாரி–39 |
| 46. | ஆரோக்கியபுரத்தில் | 19 |
| 47. | ஆரோக்கியாபுரம் | ஒப்பாரி–21 |
| 48. | ஆளழகர் சித்தசனே | 23 |
| 49. | ஆளழகன் | 9 |
| 50. | ஆளழகன் | ஒப்பாரி–9 |
| 51. | ஆளழகன் | ஒப்பாரி–16 |
| 52. | இந்திரரும் | 19 |
| 53. | உத்தமநாதன் | 33 |
| 54. | உத்தமனே | 31 |
| 55. | உத்தமியாள் | 33 |
| 56. | ஒயிலன் | 32 |
| 57. | ஓசகியே | 33 |
| 58. | கங்காதரனார் | 18 |
| 59. | கஞ்சமலர்வாணி | ஒப்பாரி–18 |
| 60. | கஞ்சன் | 7 |
| 61. | கட்டழகன் மன்மதர்க்கு | 29 |
| 62. | கட்டழகா | 7,9,18 |
| 63. | கட்டழகி | ஒப்பாரி–26 |

64. கட்டளகா ஒப்பாரி–8
65. கடவுள் மருமகனே 29
66. கடுகன் 18
67. கடுவன் 29
68. கண்ணாளா 6
69. கத்தறிந்த காவலனே 29
70. கதிரோனை 18
71. கந்தர்கிருபாகரனே 29
72. கந்தனுக்கு 19
73. கமலம் 17
74. கயலழகன் 4
75. கர்த்தனே 18
76. கலியாணசிங்காரா 29
77. கற்ப்பிக லிந்திரன் 9
78. கன்னிமகாலெட்சுமி 18
79. கன்னியர்கள்ரம்பையர்கள் 29
80. கன்னியழகிகாத்தாயி
செங்கமலம் ஒப்பாரி–40
81. கன்னிரதிதேவி 29
82. காதவல்லி ஒப்பாரி–38
83. காமரதிதேவியரே ஒப்பாரி–32
84. காமவல்லி ஒப்பாரி–38
85. காமன் 9
86. காமனே 18
87. காந்தி 4
88. கார்வண்ணன் 29
89. காரிகையாள் 6
90. கிளி 14
91. குணசம்பரான் 10
92. குயிலும் 14
93. கூந்தலளகியடிகுஞ்சாயி ஒப்பாரி–40
94. கோதைவல்லி ஒப்பாரி–38
95. கோபாலன் ஒப்பாரி–2
96. கோவிந்தன் ஒப்பாரி–28
97. சக்குராயுதச்சுதனே 31
98. சகலைகலைவல்லவனே 31
99. சணுர்சந்துர்ச்சணன் 2
100. சத்தரிஷிதேவர்களுக்கரசன் 30
101. சதாசிவனாதன் மகளும் 31
102. சந்திரரும் சூரியரும் ஒப்பாரி–5
103. சரசன் விஷசனமே 31
104. சாயல்முத்தே ஒப்பாரி–38
105. சிகாமணி 19
106. சிங்காரவல்லிமுத்தே ஒப்பாரி–7
107. சிங்கிராமாயி ஒப்பாரி–40
108. சித்தசவேள்மன்மதரும் ஒப்பாரி–41
109. சித்தூர்பயரெசிகர் 5
110. சித்திரராசமன்மதனார் ஒப்பாரி–27
111. சிரோமணி 8, 19
112. சிரோமணியே ஒப்பாரி–7
113. சிவசங்கரன்மகளே 30
114. சிவன்மாரில்அடித்தவர் ஒப்பாரி–1
115. சீகரெத்தினம் 22
116. சீமாட்டி 5
117. சீருள்ள மீனாட்சி ஒப்பாரி–40
118. சீவசெந்துதேவர் 30
119. சுந்தரப்பெண்சுந்திரமே ஒப்பாரி–38
120. சூரரை 26
121. செங்கண்மடவனோ ஒப்பாரி–14
122. செண்பகமே ஒப்பாரி–40
123. செல்விசிவகாமி ஒப்பாரி–40
124. செவ்வியர் 5
125. செவ்வேள் ஒப்பாரி–5
126. சோட்டுப்பெண்டுகளா ஒப்பாரி–40
127. தகப்பா 21
128. தங்கமுத்தே ஒப்பாரி–7
129. தஞ்சாயி ஒப்பாரி–40
130. தூதர்கள் 8,9,10
131. தூதரவிட்டு 19
132. தூதுவர்கள் 9,10
133. தூதுவர்கள் ஒப்பாரி–16
134. தெய்வானை ஒப்பாரி–15

135. தேவர்கள்
சாரங்கபாணிஅய்யன் ஒப்பாரி–3
136. தேவர்களும் 19
137. தேவர்களும் ஒப்பாரி–44
138. தேவர்கோன் 8
139. தேவாதிதேவர்கள் 8
140. தேவிரதி 30
141. தேவேந்திரன் ஒப்பாரி–15
142. தேன்மொழியே ஒப்பாரி–27
143. நகருக்கதிபதி 2
144. நஞ்சுண்டமகாலிங்கர் 22
145. நமனை 25
146. நாககன்னி ஒப்பாரி–40
147. நாகரீககன்னியர்கள் 12
148. நாகரெத்தினம் 22
149. நாதனுடன் 22
150. நாயகமே 19
151. நாயகர் 13
152. நாயகன் 12
153. நாராயிணன் 22
154. நிமலகண்டயீசுபரனார் ஒப்பாரி–2
155. நிர்மதராசன் ஒப்பாரி–10
156. நீலமதன் ஒப்பாரி–22
157. நிலமுளிகணங்கள் ஒப்பாரி–22
158. நிலவர்ணன் 18
159. நேமவல்லி ஒப்பாரி–38
160. பங்கொடியேதாதிகளா ஒப்பாரி–2
161. பஞ்சவர் 7
162. பச்சமுள்ள
தேவரெல்லாம் ஒப்பாரி–43
163. பச்சைவண்ணன் 33
164. பச்சைவல்லி ஒப்பாரி–38
165. பரமசிவன்யென்
தகப்பன் ஒப்பாரி–43
166. பரதேசியள் ஒப்பாரி–47
167. பரமேஷ்பரன் ஒப்பாரி–23
168. பார்த்திபன்மன்மதர்க்கு ஒப்பாரி–43
169. பார்பதியாள் ஒப்பாரி–47
170. பாலகரும் 28
171. பாலரையும் 23
172. பாவிகளா ஒப்பாரி–47
173. பிரம்மாலையங்கள் ஒப்பாரி–21
174. பிரம்மாவு 19
175. புத்திரனும் 22
176. பெண்ரதி 13
177. பெருமாமகனார் 19
178. பொம்மி ஒப்பாரி–40
179. பொம்மிமுத்தே ஒப்பாரி–38
180. பொன்னிஅலமேலும் ஒப்பாரி–40
181. மகமாது 3
182. மகராசன் ஒப்பாரி–14
183. மகாசிவன்யென்தகப்பன் 24
184. மகாதேவர்கள் 20,24
185. மகாவிஷ்ட்ணு 18,20
186. மகாவிஷ்ட்ணு ஒப்பாரி–10
187. மங்கியடிபொங்கியடி ஒப்பாரி–40
188. மங்கையர் 14
189. மங்கைரதிதேவியரும் 20
190. மங்கைரதிதேவி 14
191. மச்சகமலாச்சி ஒப்பாரி–40
192. மச்சவதாரமெடுத்து 27
193. மச்சினார் 3
194. மணவாளர் 3
195. மணிமார்பன்ராவுணன் 3
196. மணவாளா 24
197. மதனையும் 26
198. மதிராசன் ஒப்பாரி–33
199. மதிராமனாக 26
200. மயில் 14
201. மயேஷபரனார் 14

202. மரயமகன் ஒப்பாரி–20
203. மருதாயிசெங்கமலம் ஒப்பாரி–40
204. மலரோன் கடவுள் 30
205. மறையோன் 20
206. மன்மதர் 3,8,9,10,11,14,17
207. மன்மதவேள் 22
208. மன்மதன் 12
209. மன்மதனார் 10,11
210. மன்மதராசன் 9
211. மன்னர் 20
212. மன்னவனே ஒப்பாரி–36
213. மாடைப்புறா 14
214. மாதர்கள் 20
215. மாதரசே 1,2
216. மாதவனார் 26
217. மாது ஒப்பாரி–15
218. மாதுக்கு 20
219. மாதுரதி 14
220. மாமன்கோபாலன் 24
221. மாமிலெட்சுமி ஒப்பாரி–10
222. மாயமகள் சுந்திரியே ஒப்பாரி–4
223. மாயமகன் மன்மதருக்கு 24
224. மாயாபுரி 20
225. மாயாபுரி ஒப்பாரி–4
226. மாலுடன் 14
227. மாறன் 14
228. முக்கண்ணழகுள்ளவரே 25
229. முக்கண்ணன்வாசகத்தோன் 25
230. முகில்வண்ணன் ஒப்பாரி–2
231. முருகாய செங்கமலம் ஒப்பாரி–39
232. முல்லை 17
233. முனிததேவர்கள் 9
234. முனிரிஷிகள் 28
235. முனிவோர் 30
236. மூர்க்கன் 25
237. மூர்த்தியெனும்என்தகப்பன் 25
238. மெல்லியரே தாதிகளா 33
239. மோகனபெண்ணாளே ஒப்பாரி–40
240. மோதிரகையளகி ஒப்பாரி–39
241. யிந்திரசபை 28
242. யிந்திரநாதன் 5
243. யிந்திராணி ஒப்பாரி–15
244. யிம்பரதியாள் 21
245. யிரணியனே 27
246. யீசன்திருமகளே 28
247. யீசன்மலரயனும் 28
248. யீசுபரியார் 19
249. யீஷ்பர்க்கு பிரம்ம 18
250. யீஷ்பரனே 21
251. யீஷ்பரிதன் 21
252. யெச்சர்கின்னரர் 28
253. யெமரிந்தமுந்தரரும் 10
254. யெளிழகன் 10,11
255. யெளிழகன்மன்மதரும் 28
256. யேகாதெசிருத்திராள் 28
257. யேகவர்ணன் 28
258. யேச்சராள்சேவுகன் 10
259. ரதி 11,12,21
260. ரம்பை 13
261. ரிஷிமார்கள் 24
262. ரீண்டசுதன் 33
263. ரூபவல்லி ஒப்பாரி–38
264. ரோகிணிவீட்டுக்கு சந்திரன் ஒப்பாரி–15
265. லெட்சுமி 21
266. வச்சிரவல்லி ஒப்பாரி–38
267. வடிவுள்ளசிங்கியடி ஒப்பாரி–40
268. வண்ணமணித் தாதிகளா ஒப்பாரி–4
269. வய்யகத்தோர் 20
270. வர்ணன் 20
271. வரதன் 27

272. வராகஅபதாரமெடுத்து 27
273. வரிசைத்துரைமகனே ஒப்பாரி–3
274. வள்ளல்மகன் 26
275. வனமாணாமைந்தனும் 26
276. வாசகர் 20
277. வாமவல்லி ஒப்பாரி–38
278. வாமனவதாரம் 26
279. வாலி 3
280. வானவர் 20
281. வானவராசேந்திரனாம் 20
282. விசாலாட்சி ஒப்பாரி–33
283. விதிராசன் ஒப்பாரி–33
284. விமலமதராசனுக்கு 33
285. வீரியடி ஒப்பாரி–39
286. வைய்குந்தன் 27
287. வெங்கிடனார் ஒப்பாரி–7
288. வெண்ணதுரை 33
289. னாருதரும் ஒப்பாரி–16